வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 02.11.2023 வியாழக்கிழமை | இதழ் : 326 | பக்கங்கள் : 16




# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பாராளுமன்ற தேர்தல் அவசியம்

## யோசனையை முன்வைக்கும் மொட்டு

கொழும்பு, நவம்பர் 02

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்க பொதுஜன பெரமுன ஆலோசனைகளை நடத்தியுள்ளது.**

**இது தொடர்பில் கட்சிக்குள் பலகட்ட பேச்சுக்கள் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவருவதாக அறியமுடிகிறது.**

நாட்டின் அபிப்பிராயத்தை துல்லியமாக பரிசோதிக்க பொதுத் தேர்தலை பயன்படுத்த முடியும் எனவும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் எனவும் பொதுஜன பெரமுன கட்சிக்குள் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடல்களில் எதிர்வரும் வரவு - செலவுத்திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கான எந்த தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் பொதுஜன

11



## மல்வத்தை மகாநாயக்க தேரரை சந்தித்தார் இந்திய நிதியமைச்சர்

கொழும்பு, நவ.02

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று கண்டியில் மல்வத்தை மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணங்களை நினைவுகூர்ந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இலங்கை மக்களுக்காக பிரதமரின் மூலம் இந்திய மக்கள் உணரும்

11

## தலைமன்னார் முனையத்தை துறைமுகமாக பெயரிட முடிவு

கொழும்பு, நவ. 02


தலைமன்னார் முனையத்தை அண்மித்த பகுதியை துறைமுகமாக வர்த்தமானியில் பெயரிடுவதற்கு கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இதற்கான வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாக கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும்

11

## மன்னிப்பு கோரினார் சுமணரத்ன தேரர்



மட்டக்களப்பு, நவ. 02

தென்னிலங்கையிலுள்ள தமிழர்களை வெட்டுவேன் எனக்கூறிய சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக காணொலி ஒன்றினை வெளியிட்டு தனது கருத்தினைப் பதிவு செய்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக

11



## திருமலைக்கு சென்றார் நிர்மலா சீதாராமன்

திருமலை, நவ. 02

கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாணத்திற்கு நேற்று இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விஜயம் மேற்கொண்டார்.

திருகோணமலை விமான தளத்தில் நிர்மலா சீதாராமனை ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதம செயலாளர் ரத்நாயக்க,ஆளுநர் செயலாளர் மதநாயக்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் அணில் விஜயஸ்ரீ, அரச அதிபர் மற்றும் சுற்றுலா

11

## சம்பந்தன் குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளவேண்டாம்!

### கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், நவ. 02

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் பதவி நீக்க விவகாரம் தொடர்பாக பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரித்துள்ளார்.

இரா.சம்பந்தன் பதவி விலகவேண்டும் என்ற கருத்து தொடர்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## வீதி விபத்துகளால் இலங்கையில் வருடாந்தம் 3000 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 02

இலங்கையில் வீதி விபத்துக்கள் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 115 சிறுவர் மரணங்கள் இடம்பெற்றுள்ளன என்று வீதி விபத்துக்களை தடுப்பதற்கான நிபுணத்துவ குழுவின் தலைவர் பேராசிரியர் சமன் தர்மரத்ன தெரிவித்தார்.

கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்

11

## யாழ். வரும் இந்திய நிதி அமைச்சரை மீனவர் சமாச பிரதிநிதிகள் சந்திப்பர்!

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரும் இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து, நாங்கள் எதிர்நோக்கும் அவலங்கள் தொடர்பில் அவருக்கு விளக்கமளிக்க உள்ளதாக யாழ்ப்பாண கிராமிய கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரும் இந்திய மத்திய நிதி அமைச்சரை சந்தித்து இந்திய மீனவர்களினால் எமது வளங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கவுள்ள தோடு எதிர்வரும் காலங்களில் தமிழகத்துக்கு சென்று தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக மீனவர்ளுக்கு எங்களுடைய அவலங்களை எடுத்துரைக்கவுள்ளோம்- என்றார். (அ-03)

## வவுனியாவில் தனி பிரதேச செயலகம் கோரி சிங்களவர் நேற்று போராட்டம்

வவுனியா, நவ. 02

வவுனியா, போகஸ்வெவ பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள சிங்கள மக்கள் நேறறு வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்பாக அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் 'ஒரே கிராமம் ஒரே நாடு' கலந்துரையாடல் நடந்தபோது, இந்த போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு சிங்கள மக்கள் ஒன்றியம் என குறிப்பிட்ட பதாதைகளை தாங்கியவாறு



மாவட்ட செயலகத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு தனியான பிரதேச

11

# இப்படியும் நடக்கிறது

பலஸ்தீனத்திற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இருந்துவந்த நீண்ட நெடிய உறவு குறித்து இந்தப் பத்தியில் நேற்றைய தினம் எழுதியிருந்தேன்.

பலஸ்தீனத்தின் தேசிய இனப்பிரச்னையை இன்று இஸ்ரேலுடன் சேர்ந்து காஸாவில் சம்ஹாரம் நடத்தி வரும் அமெரிக்கா கூட ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஐ.நாவில் பலஸ்தீனம் ஓர் அந்தஸ்துடன் இன்று இருக்கின்றது.

இன்று பிரச்னை ஹமாஸ் இயக்கத்திற்கும் மேற்கு நாடுகளுக்கும்தான். ஆனாலும் பலஸ்தீனம் ஒரு தேசிய இனம் என்பதை அவர்களும்கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று பலஸ்தீனத்தின் காஸாவில் நடக்கும் கொடுமைகள் காரணமாக உலகம் இரண்டு பட்டாலும் பலஸ்தீனத்துடன் ஓர் 'உலகம்' இருப்பது பற்றியும், அவர்களின் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றபோது, அது நமது கதவையும் திறக்கப்பண்ணும் என்ற நம்பிக்கையை தமிழர் சமூக ஜனநாயக்கட்சித் தலைவர் சிறிதரன் சுகு தெரிவித்த நம்பிக்கை பற்றியும் நேற்று எழுதியிருந்தேன்.

ஆனால் அவரோடு கதைக்கின்றபோது இப்படி இந்தப் பத்தியில் எழுதுவதற்காக கதைக்கவில்லை. நேற்று அந்தப் பத்தியைப் படித்துவிட்டு என்னோடு பேசிய சுகு, சொன்ன மற்றுமொரு விடயமும் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டியது.

இன்று பலஸ்தீனத்திற்கு எதிராக இஸ்ரேல் நடத்தி வரும் கொடுமை, ஹமாஸை அழிப்பது என்ற பெயரில் ஒட்டுமொத்த பலஸ்தீனத்தையும் அழிப்பதாக மாறிவிட்டால், அது சாத்தியமாகிவிட்டால், இலங்கையில் மாத்திரமல்ல, உலகம் எங்கும் தத்தமது உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் சிறுபான்மை தேசிய இனங்களின் போராட்டம் எல்லாமே முடிவுக்கு வந்துவிடும். பலஸ்தீன போராட்டம் அழிந்ததுபோல எல்லா சிறுபான்மை இனங்களையும் அழித்தொழிக்கின்ற வேலையை பெரும்பான்மை இனங்கள் செய்து முடித்துவிடும் என்ற அவரது எச்சரிக்கையை இங்கு எழுதாமல் தவிர்க்க முடியவில்லை.

இனி இன்று இந்தப் பத்தியில் சொல்ல வந்த விடயத்தைப் பார்ப்போம்.

தமிழ் தேசியக் கட்சிகள் எல்லாமே ஒற்றுமைப்பட வேண்டும் என்று மக்கள் விருப்பம்கொண்டிருந்த வேளையிலேயே தமிழரசுக்கட்சி தனித்துச் செல்வது என்ற முடிவை எடுத்தது. ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் மேலும் மூன்று கட்சிகளை சேர்த்துக் கொண்டு, ஐந்து கட்சிக் கூட்டணியானது. அதனுடன் விக்னேஸ்வரனின் கட்சியையும் சேர்க்கும் முயற்சி நடந்தபோதிலும் அது சாத்தியமற்றுபோயிற்று.

ஆனாலும் தனித்துவிடப்பட்ட தமிழரசு இப்போது, ஐந்து கட்சிக் கூட்டணியில் இருக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியை பிரித்து எடுக்க அதிதீவிர முயற்சியை மேற்கொண்டிருப்பதாக போராளிகள் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஏற்கனவே ஜனநாயக போராளிகள் கட்சியுடன் நெருக்கமாக இருந்துவந்த தமிழரசின் மூத்த தலைவர் ஒருவர் - அவர் விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தபோதும் அவர்களுடன் நெருக்கமாக இருந்தவர்தான், அவரே போராளிகள் கட்சி முக்கியஸ்தர்களை தமிழரசின் பக்கம் சேர்க்கும் முயற்சியில் அதிதீவிரமாக இறங்கியிருக்கிறார் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

ஏற்கனவே கூட்டை உடைத்து தனித்து வெளியேறியதால் சங்கடப்பட்டுப்போன தமிழரசு கட்சி, மீண்டும் ஒற்றுமையாக இருக்கும் ஐந்து கட்சிக் கூட்டணியை உடைக்க எடுக்கும் முயற்சிகள் தமிழரசுக்கே பாதகமாகும் என்பது அவர்களுக்கு தெரியாததல்ல.

தமிழரசின் ஒரு முக்கியஸ்தருடன் இதுபற்றி பேசிய போது அவர் சொன்ன தகவல், நிச்சயமாக போராளிகளுக்கும் திருப்தியளிக்கக்கூடியதல்ல.

'அவர்களைச் சேர்த்துக்கொள்வதால், கிளிநொச்சியில் ஒருவரின் தனி 'ஆட்டத்திற்கு' முற்றுப்புள்ளி வைக்கவே இந்த முயற்சியில் சிலர் பின்னணியில் இருந்து ஈடுபடுகின்றார்கள். ஆனால் போராளிகள் கட்சியில் இருப்பதே மூன்றுபேர் மட்டும்தானே. அவர்களால் எந்த மாற்றமும் வரப்போவதில்லை.' என்றார் அந்த முக்கியஸ்தர்.

தமிழரசின் இந்த முயற்சிக்கு மத்தியில், ஐந்து கட்சிக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி மன்னாரில் நடைபெறவிருக்கின்றது. அன்றைய கூட்டத்தில் இந்த விவகாரம் அலசப்படலாம் என்று அந்தக் கூட்டணி வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.!

**-ஊர்க்குருவி.**

# பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்!

*யாழ்ப்பாணம், நவ. 02*

கொரோனா பேரிடர், அதனைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி ஆகியவற்றாலும் , வீதி மிக மோசமாக பழுதடைந்து இருந்த காரணத்தாலும் இடைநிறுத்தப்பட்டு இருந்த பஸ் சேவை தற்போது மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.



காரைநகர் - யாழ்ப்பாணம் இடையில் 785/1 வழித்தடத்தில் இயங்கி வந்த பஸ் சேவை கடந்த சில வருடங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டு இருந்த நிலையில் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து காலை 10. 30 மணியளவில் தனது பயணத்தை ஆரம்பிக்கும் குறித்த பஸ் , காரைநகரில் இருந்து மூளாய் பிள்ளையார் கோவிலடி சென்று அங்கிருந்து டச்சு வீதி ஊடாக சித்தன்கேணி - யாழ்ப்பாணம் வீதியை வந்தடைந்து, வட்டுக்கோட்டை சந்தி சென்று, அராலி செட்டியார்மடம் ஊடாக யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தைச் சென்றடையும்.

மீண்டும் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து, மதியம் 1.20 மணியளவில் புறப்பட்டு வந்த வழித்தடம் ஊடாக காரைநகரை சென்றடையும். அதேவேளை குறித்த பஸ் பயணிக்கும் டச்சு வீதி கடந்த காலங்களில் மிக மோசமாக சேதமடைந்தி ருந்த நிலையில் தற்போது வீதி புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலை மாணவன் புருசோத்தமனின் நினைவேந்தல்

*யாழ்ப்பாணம், நவ. 02*

படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் புருசோத்தமனின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்த செல்லத்துரை புருசோத்தமன் கடந்த 2008.11.01 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

இவரது 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



இதில் மாணவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, சுடரேற்றி, மலர் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (அ)

# பிரிவுபசார விழாவும் சேவை நலன் பாராட்டும்

*வடமராட்சி, நவ. 02*

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளராகக் கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் அதிவிசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கு இடமாற்றலாகிச் செல்லும் ஆழ்வாப்பிள்ளை சிறியின் பிரிவுபசார விழாவும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவரும் கிராம உத்தியோகத்தருமான அரியகுமார் ரதீஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

மருதடி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து பிரதேச செயலாளர், தவில் நாதஸ்வர வாத்தியத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன், கணக்காளர் ம.சிவகுமாரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, நிர்வாக கிராம அலுவலர் சோ.சிவலிங்கம், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஏனைய பிரதேச செயலகங்களான யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் ஆழ்வாப்பிள்ளை சிறிக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



ஈழநாடு
Eelanadu
02.11.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## வடபுல மீன்பிடித் தொழில் ஆபத்திலா?

சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய வேண்டாமென்று, வடமராட்சி மீனவர் சம்மேளனம் அண்மையில் பிரேரணையொன்றை நிறைவேற்றியிருந்தது. சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் முடிவால், தங்களது பாரம்பரிய மீன்பிடித் தொழில் அழிந்துவிடும் - இதன் காரணமாகவே நாம் இந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிருக்கின்றோம் - என்று மீனவர் சம்மேளனம் தெரிவித்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைகள் பெருமளவில் அமைக்கப்பட்டபோதும், மீனவர் அமைப்புக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இதன் காரணமாக, கரையோரங்களில் சிறு மீன்பிடி மற்றும் நண்டு, இறால் பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் இல்லாமல் போய்விடும் - எனவே கடலட்டை பண்ணைகளை பெரியளவில் மேற்கொள்ள வேண்டாமென்றும் மீனவர் அமைப்புக்கள் கோரியிருந்தன - எனினும் பெருமளவு வருமானங்கள் ஈட்டும் தொழில்களுக்கு நாம் மாற வேண்டுமென்றும் இன்னொரு சாரார் தெரிவித்தனர். எனினும் பாரம்பரியமாக மீன்பிடியை நம்பியிருக்கும் மக்களை ஒன்றிணைக்கும் அமைப்புக்கள் தொடர்ந்தும் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றன. எனினும் இதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளவில்லை.

வடபுல மீனவர்கள் நீண்டகாலமாக தமிழ் நாட்டு மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். இது தொடர்பில் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும், இலங்கையின் கடல் எல்லைகளுக்குள் மீன்பிடிப்பில் ஈடுபட முயற்சிக்கும் தமிழ் நாட்டு மீனவர்களை நிரந்தரமாக கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் குறுகிய எல்லைக்குள் இரு நாட்டு கடல் எல்லைகளும் இருப்பதால், மீனவர்கள் எல்லை தாண்டுவது சாதாரணமான ஒரு விடயமாகவே மாறிவிட்டது.

இந்த நிலையில் தற்போது வடக்கு மாகாணத்தின், பாரம்பரிய மீன்பிடித் தொழிலுக்கும், ஆபத்து ஏற்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக மீனவர்கள் அச்சப்படுவதை இலகுவில் நிராகரித்துவிட முடியாது. கடலட்டை இலங்கையில் உணவுக்கு பயன்படுத்தும் ஒரு கடலுயிரி இல்லை. தென்கிழக்காசிய நாடுகளில் - குறிப்பாக சீனாவில் ஒரு விலையுயர்ந்த கடல் உணவு. அங்கு இதற்கு பெரும் கேள்வியுண்டு. இந்த பின்புலத்தில் வடபுல கடலட்டைகள் சீனாவிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

கடல் உயிரியல் நிபுணர்களின் கருத்துப்படி, கடலட்டை பண்ணைகள் பெருகிச் செல்லும் போது, நீண்டகால அடிப்படையில் அப்பகுதியில் மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படும் - இதனால் அப்பகுதியில் பாரம்பரிய மீன்பிடி இல்லாமல் போகும் ஆபத்துண்டு. - என கூறுகின்றனர்.

அவ்வாறான சூழலில் மீன்களை வெளியிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால், பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படும். அவர்கள் வேறு தொழிலை நாடவேண்டிய நிலைமை ஏற்படும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்தை கைவிடுமாறு மீனவர் அமைப்புக்கள் கோருகின்றன. மீனவர்களின் பிரச்னைகள் தொடர்பில் - அரசியல் கட்சிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் கரிசனை கொள்ளவேண்டும்.

### வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.”*

**- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)**



# வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஆராயும் கூட்டம் முல்லைத்தீவில்



*முல்லைத்தீவு, நவ. 02*

*முல்லைத்தீவு மாவட்டத்தில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.*

*முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.*

*இதில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.கோகுலராஜா வெள்ளப்பெருக்கு, சூறாவளி, டெங்கு முதலான அனர்த்தங்களை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.*

*இதன்போது வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையினால் உண்டாகும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் முறைகள் மற்றும் அவற்றை குறைப்பதற்கான திட்டமிடல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினருடன் ஆராயப்பட்டது.*

*அத்துடன், சீரற்ற காலநிலையால் ஏற்படும் பாதிப்புக்களை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.*

*மேலும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.*

*இதனைவிட அனர்த்தங்களின் போது மக்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய முன்னாயத்த நடவடிக்கைகள், வீதிப் போக்குவரத்து மற்றும் வீதி விபத்து, பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளில் அனர்த்த குறைப்பு செயற்றிட்டம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.*

*(அ)*

# சர்வதேச சந்தையில் இலங்கையில் இளநீர்களுக்கு அதிகளவில் கேள்வி!

*கொழும்பு, நவ. 02*

*இலங்கை இளநீர்களுக்கு சர்வதேச சந்தையில் கேள்வி வேகமாக அதிகரித்து வரும் நிலையில், இவ்வாண்டில் இளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*


*விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர , தென்னை அபிவிருத்தி சபை , இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையில் தென்னை பயிற்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது.*

*கடந்த 2022ஆம் ஆண்டு 11 மில்லியன் இளநீர்களை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் மூலம் 110 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*மேலும், இவ்வருடம் இதுவரையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள இளநீர்களின் தொகை 14 மில்லியன் எனவும் இதன் மூலம் கிடைத்த வருமானம் 140 மில்லியன் ரூபா எனவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப் பீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டும்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கன்னி**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வாய்ப்புகள் தேடி வரும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**விருட்சிகம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதரர்கள் வகையில் உதவிகள் கிடைக்கும். பஉத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும்.

**மீனம்**
முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

# ஆளுநர் மாளிகையை வைத்து நிர்வாகத்தை முடக்குகின்றனர்

## ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 02

ஆளுநர் மாளிகையை வைத்து மாநில நிர்வாகத்தை முடக்குகின்றனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின், தனது ‘இந்தியாவுக்காக பேசுகிறேன்’ குரல் பதிவில் தெரிவித்துள்ளார்.

‘மாநில சுயாட்சி உண்மையான கூட்டுறவு கூட்டாட்சியியலுக்கான எனது குரல்’ என்ற தலைப்பில், ‘இந்தியாவுக்காக பேசுகிறேன்’ என்ற குரல் பதிவின் 3ஆம் பாகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: கடந்த செப்.23ஆம் திகதி வெளியான 2ஆம் பாகத்தில் சிஏஜி அறிக்கை குறித்து பேசியிருந்தேன்.

அவையெல்லாம் உண்மை என்று மத்திய அரசே ஒப்புக் கொள்வது போல் ஒரு விஷயத்தை செய்துள்ளனர். நாடு முழுவதும், இந்த குரல் பதிவு சென்றடைந்த பின், ஒக்.2ஆம் வாரத்தில், பாஜக அரசின் ஊழல்களை வெளிக்கொண்டு வந்த சிஏஜி அதிகாரிகள் செப்.12 ஆம் திகதியே கூண்டோடு மாற்றப்பட்டுள்ளனர்.

தற்போது நான் பேசப்போவது மாநில உரிமைகள். திமுக தனக்கென்று தனித்துவமான கொள்கையுடன் 75ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் கட்சி மட்டுமின்றி, பாராளுமன்றத்தில் 3ஆவது பெரிய கட்சியுமாகும். அப்படிப்பட்ட திமுகவின் கொள்கைகளில் முக்கியமானது மாநில சுயாட்சி.

பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் முதல்வராக இருந்த போது, மாநில உரிமைகளுக்கு ஆதரவாக நிறைய பேசினார். ஆனால், பிரதமரானபின், மாநில உரிமைகளைப் பறிக்கிறார். மாநிலங்களை ஒழிக்க வேண்டும். இல்லாவிட்டால் நகராட்சிகளாக மாற்றிவிட வேண்டும் என்று பாஜக அரசு நினைக்கிறது. டெல்லியை மையப்படுத்தாமல் மாநிலங்களுக்கு ஏற்ற அணுகுமுறையுடன் திட்டங்கள் தீட்டப்படும் என்று கூறிய பிரதமர், திட்டக்குழுவை கலைத்துவிட்டு சத்தே இல்லாத நிதி ஆயோக்கை உருவாக்கினார்.

கூட்டாட்சி கருத்தியலை ஆதரிப்பவன் என்று கூறினார். ஆனால், மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்ற கூட மத்திய அரசின் வாசலில் காத்திருக்கவேண்டிய நிலையை உருவாக்கியுள்ளனர். மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஆதாரங்களை வழங்குவோம் என்றார். ஆனால், ஜிஎஸ்டி. இழப்பீடு வழங்கும் காலத்தைக் கூட நீட்டிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். இதனால் மாநிலங்களின் நிதி நிலைமை அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளது.

மேலும், 12ஆவது நிதி ஆணையத்தில் இருந்து நிதி குறைந்ததால், கடந்த 19 ஆண்டுகளில் தமிழகத்துக்கு ரூ.85 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இனிமேல் ஆண்டு தோறும் ரூ.10 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்படப்போகிறது. இந்த நிலை தமிழகத்துக்கு மட்டுமல்ல் எல்லா மாநிலங்களிலும் உள்ளது.

ஆளுநர் மாளிகையை வைத்து மாநில நிர்வாகத்தை முடக்குகின்றனர். அதனால்தான், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய 19 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருக்க ஆளுநரை பாஜக பயன்படுத்துகிறது. மொத்தத்தில், பாஜக ஆட்சியில் மாநில உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன -என்றார். (அ)

# பழனிசாமி காரை நோக்கி கல் வீசியதாக 2 பேர் கைது

இராமநாதபுரம், நவ. 02

பசும்பொன் தேவர் குருபூஜைக்கு வந்த அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் காரை நோக்கி கல் வீசியதாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகேயுள்ள பசும்பொனில் நேற்று முன்தினம் தேவர் குருபூஜை, ஜெயந்தி விழா நடைபெற்றது. இதில் பங்கேற்று அஞ்சலி செலுத்திய அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பின்னர் காரில் திரும்பிக் கொண்டிருந்தார்.

பசும்பொன்னில் உள்ள ஒரு தோட்டப் பகுதியில் நின்று கொண்டிருந்த வடுகபட்டியைச் சேர்ந்த முத்துமாரி(வயது-45) என்பவர், பழனிசாமியின் காரை நோக்கி கல் எறிந்தார். பொலிஸார் அவரைப் பிடித்த பின்னர், பழனிசாமியை பாதுகாப்பாக அனுப்பிவைத்தனர். இதுகுறித்து தனிப் பிரிவு காவலர் அன்வர் ஜமால் அளித்தபுகாரின்பேரில், கமுதி பொலிஸார் முத்துமாரியைக் கைது செய்தனர்.

இதேபோல, பசும்பொன் தெப்பக்குளம் பகுதியில் கடலாடி தாலுகா சின்னபொதிகுளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜீவ் காந்தி(வயது-44) என்பவர், பழனிசாமி காரை நோக்கி கல் வீசினார். இதுகுறித்து காவலர் வேல்முருகன் அளித்த புகாரின் பேரில், கமுதி பொலிஸார் ராஜீவ்காந்தியைக் கைது செய்தனர். (அ)

# மசோதாக்கள், அரசாணைகளை கிடப்பில் போடுகின்றார் ஆளுநர்

## தமிழக அரசு அவருக்கு எதிராக வழக்கு

சென்னை, நவ. 02

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள், அரசாணைகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி விரைவில் ஒப்புதல் வழங்க உத்தரவிடவேண்டும். இதற்கு கால வரம்பு நிர்ணயம் செய்யவேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

இதுதொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் 198 பக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள், அரசு உத்தரவுகள், அரசின் கொள்கை முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் நீண்ட காலமாக ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார். அரசியலமைப்பு சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைகளை செய்யாத அவரது செயல்படாத தன்மையையே இது காட்டுகிறது.

தமிழக அரசுக்கு அவர் போதிய ஒத்துழைப்பு அளிக்காமல் எதிர்மறையாக செயல்படுவதால், அரசு நிர்வாகப் பணிகள் ஸ்தம்பித்துப் போய் உள்ளன.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர், அரசியல் அழுத்தம் காரணமாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலஅரசுக்கு எதிரான போக்கை கடைபிடிக்கிறார். பல்வேறு ஊழல் வழக்குகளில் தொடர்பு உடைய முன்னாள் ஐபிஎஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரசு பொது ஊழியர்களுக்கு எதிரான சிபிஐ விசாரணைக்கும், ஆயுள் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுவிக்கும் விஷயத்திலும் உரிய ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ளார்.

ஆளுநரின் போக்கு குறித்து குடியரசுத் தலைவரை மாநில சட்டத் துறை அமைச்சர் நேரில் சந்தித்து முறையிட்ட பிறகும், பலன் இல்லை.

ஆளுநரின் செயல்படாத போக்கு காரணமாக, அரசியலமைப்பு சட்டத்தலைவரான ஆளுநருக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் அரசியலமைப்பு சட்ட ரீதியாக முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் மசோதாக்களுக்கு இயன்றவரை விரைவாக முடிவு எடுத்து ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவருக்கு உடன்பாடு இல்லை என்றால், திருப்பி அனுப்ப வேண்டும். அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும். அதை விடுத்து, மசோதாக்களை நீண்ட காலமாக கிடப்பில் போட்டு வைத்திருப்பது சட்டவிரோதம். 2ஆவது முறையாக தமிழக அரசு அனுப்பி வைக்கும் மசோதாக்களுக்கு அவர் சட்டரீதியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (அ)

# மக்களை வதைக்கும் வரி!

## சஜித் பிரேமதாஸ கடும் சீற்றம்



கொழும்பு, நவ. 02

“பெறுமதி சேர் வரியை (வெற் வரி) 18 சதவீதமாக அதிகரிப்பது வரி சூத்திரத்தை குழப்பியடிக்கும் செயல் என்பதுடன், இந்த பிற்போக்கான வரி அதிகரிப்பானது மக்கள்மீது மேலும் சுமையை திணிக்கும் செயலாகும்.” - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவுடன் நடந்த கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச வரி நிர்வாகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் அரசு செய்யாதுள்ளது , வரி நிர்வாகத்தை டிஜிற்றல் மயமாக்குதல், நவீனமயமாக்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றின் மூலம் அரச வருவாயை அதிகரிக்க முடியும் , இவ்வாறு வரி செலுத்தாதோர் தொடர்பில் உகந்த நடவடிக்கையும், அறவீட்டையும் மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சாதாரண மக்களிடமிருந்து வரி வருவாயை அதிகரித்து அரச முற்படுகின்றது.

பெறுமதி சேர் வரியை 18 சதவீதமாக அதிகரித்து சாதாரண மக்களின் வரிச்சுமையை அதிகப்படுத்துவது கீழ்த்தரமான செயலாகும்-என்றார்.

(அ)

# ஹமாஸ் வசம் உள்ள பணயக் கைதிகளில் இலங்கையர் ஒருவரும் சிக்கியிருக்கலாம்!

கொழும்பு, நவ. 02

ஒக்ரோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்ர் காணாமல் போன இலங்கை பிரஜையான சுஜித் பண்டார யத்வாரவும் ஹமாஸ் பிடியில் உள்ள பணயக்கைதிகளில் ஒருவராக இருக்கலாம் என இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் சுஜித் பண்டார யாதவரவின் குடும்ப உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அடையாளம் தெரியாத சடலங்களில் இருந்து இஸ்ரேல் பொலிஸாரால் எடுக்கப்பட்ட மரபணு மாதிரிகள் யாதவரவின் பிள்ளைகளின் மரபணு மாதிரிகளுடன் பொருத்தம் உள்ளதா என ஆராய்ந்து வருவதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

ஆரம்பத்தில் காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 222 ஆக பதிவாகியிருந்தபோதிலும், புதிய புதுப்பிக்கப்பட்ட தகவலின்படி காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 239 என தூதுவர் நிமல் பண்டார சுட்டிக்காட்டினார்.

மேலும், 4 பணயக்கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்துள்ளதாக தூதுவர் கூறினார்.

இவ்வாறான பின்னணியில் சுஜித் பண்டார யத்வாரவை காப்பாற்ற இஸ்ரேல் அரசாங்கம் மற்றும் அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்படவுள்ளதாக தூதுவர் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார். (அ)

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களும் பணிப் புறக்கணிப்பு



வடமராட்சி, நவ.01

சுகாதார ஊழியர்கள் நேற்று சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்பாக மேற்கொண்டனர்.

2016 இன் பின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்பதோடு, கிழமையில் ஐந்து நாட்கள் வேலை உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நேற்று மு.ப 7.00 தொடக்கம் நண்பகல் 12.00 வரை சுகாதார சேவை தொழிற் சங்கக் கூட்டணியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(அ-02)

# வடமராட்சியை மிரட்டிய திருடன் துன்னாலை காசி மடக்கிப்பிடிப்பு!

## 2 வருடங்களுக்கு மேல் தலைமறைவு வாழ்க்கை

யாழ்ப்பாணம், நவ. 02

2 வருடங்களுக்கும் மேலாக பொலிஸாருக்கு டிமிக்கி விட்டு, காட்டுக்குள் தலைமறைவு வாழ்க்கை நடத்தியபடி, பல்வேறு வாள்வெட்டு, கொள்ளை உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த ‘துன்னாலை காசி’யை நெல்லியடி பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

முள்ளி காட்டுக்குள் பதுங்கியிருந்த காசியை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் காலையில் மடக்கிப் பிடித்தனர்.

வடமராட்சி பிரதேசங்களில் இடம்பெற்ற பல வாள்வெட்டு, வீடு புகுந்து திருட்டு, தாக்குதல், கொடிகாமம்- பருத்தித்துறை வீதியின் முள்ளி பகுதியில் இடம்பெறும் வழிப்பறி திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் ‘துன்னாலை காசி’.

காசியை கைது செய்ய பொலிஸார் பலமுறை முயன்றும் முடியவில்லை. ஒருமுறை பொலிஸாரின் பிடியில் சிக்கியபோதும், பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கி விட்டு, காசி தப்பியோடியிருந்தார்.

இந்த நிலையில், முள்ளி காட்டுப்பகுதிக்குள் காசி தலைமறைவு வாழ்க்கை நடத்திவரும தகவல் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்ததன் அடிப்படையில், நேற்று முன் தினம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு, காசியை மடக்கிப் பிடித்தனர்.

காசியிடம் நெல்லியடி பொலிஸார் தொடர் விசாரணை நடத்தி வரும் நிலையில், அவரால் திருடப்பட்ட பல்வேறு பொருட்கள் பற்றிய தகவல்கள் கிடைத்து வருகின்றன. இது வரை 5 நீரிறைக்கும் மோட்டார்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# நெருக்கடியில் இருந்து மீள்வது குறித்து 2ஆவது உயர்மட்ட வட்டமேசை மாநாடு




பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பான இரண்டாவது உயர்மட்ட வட்டமேசை கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தனியார் துறை மேம்பாட்டு பங்காளிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

2022 டிசெம்பரில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த உயர்மட்ட வட்டமேசைக் கலந்துரையாடல், பொருளாதார மற்றும் கட்டமைப்பு தொடர்பான முக்கிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் நோக்கத்துடன் இது கூட்டப்பட்டது.

நெருக்கடி நிலையிலிருந்து நிலையான வளர்ச்சிப் பாதைக்கு பிரவேசித்தல், முதலீடுகளை ஈர்த்தல், தனியார் மூலதனத்தை ஈடுபடுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அரசாங்கமும் இதில் பங்கேற்கேற்கும் தரப்பினரும் இலங்கைக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான பசுமை அபிவிருத்திக்குத் தேவையான அர்ப்பணிப்பைப் பேணுதல் என்பன குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தினர்.

மீட்சியில் இருந்து நிலையான வளர்ச்சிப் பாதையை நோக்கி நகரும் இலங்கைக்கான வளர்ச்சியின் மூலோபாய திசைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு கருத்துத் தெரிவித்தார்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க விசேட விளக்கமொன்றை வழங்கினார்.

(அ)

# கோப்பாயில் ஆலயம் செல்லும் பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்ட கொள்ளையன் கைது!

யாழ்ப்பாணம், நவ. 02

ஆலய வழிபாட்டுக்கு செல்லும் பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 10 தங்கப் பவுண் நகைகள், கைப்பைகள், அலைபேசிகள் மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கோப்பாய் பகுதியில் விரத வழிபாட்டுக்கு ஆலயம் செல்லும் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.



யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றதடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான பொலிஸாரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

(அ-03)

# ஒழுக்கக்கோவையை மீறி நடக்கும் எம்.பிக்களின் உறுப்புரிமை இரத்து

## சட்டமூலம் தயார் என்கிறார் நீதியமைச்சர்



**கொழும்பு, நவ. 02**

**பாராளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய ஒழுக்கக்கோவை தயாரிக்கப்படும் எனவும், அதனை மீறுபவர்களுக்கு பாராளுமன்ற உறுப்புரிமை இரத்துச்செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமரும் நானும் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரத்யேக ஒழுக்கக்கோவை தயாரிக்கப்பட்டு, அவர்கள் அதற்கமைவாக செயற்படவேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்படுத்தப்படும்.

அண்மைய காலங்களில் நாட்டுமக்கள் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான நம்பிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அரச ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல், ஊழல் மோசடிகளில் ஈடுபடல், அரச சேவை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் அநாவசிய தலையீடுகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் தமது பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். இந்த நிலை தொடருமேயானால், கடந்த வருடத்தைப் போன்று நாடு மீண்டும் மிக மோசமான வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே வெறுமனே கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்துப் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து, அதனை முன்னிறுத்திய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பதற்காகவே நாம் இந்த யோசனையை முன்வைத்தோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம், புதிய மத்திய வங்கிச் சட்டம், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம், ஊழல் ஒழிப்பு சட்டம் போன்றவற்றின் ஊடாக நாட்டில் கட்டமைப்பு ரீதியில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

அதன் நீட்சியாகவே தற்போது பாராளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென பிரத்யேகமாக ஒழுக்கக்கோவை ஒன்றைத் தயாரித்து, அதன்பிரகாரம் அவர்கள் செயற்படவேண்டியது கட்டயமாக்கப்படும். அதுமாத்திரமன்றி இச் சட்டமூலத்தின்கீழ் ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும். எனவே மேற்குறிப்பிட்ட ஒழுக்கக்கோவையை மீறி செயற்படுகின்ற மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அக்குழுவிடம் முறைப்பாடளிக்கமுடியும்.

அம்முறைப்பாடுகள் தொடர்பில் குறித்த குழு விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையைத் தீர்மானிக்கும். உச்சபட்சமாக குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் உறுப்புரிமையை நீக்குவதற்கான அதிகாரமும் அக்குழுவுக்கு வழங்கப்படும்-என்றார். (அ)

# 800 ரயில் பயணங்கள் ரத்து!

*கொழும்பு, நவ. 02*

*கட்டுப்பாட்டாளர்கள், சாரதிகள் உள்ளிட்ட ரயில்வே ஊழியர்கள் மாதத்தின் கடைசி வாரத்தில் பணிக்கு சமூகமளிக்காத காரணத்தினால் இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் மட்டும் 800 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் குறைந்தது 6 நாட்கள் சுகயீன விடுப்பு எடுத்து பணிக்கு வருவதில்லை என்றும், பணிக்கு வராததால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.*

*கடந்த 9 மாதங்களில் 800க்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த வாரத்தின் கடந்த 4 நாட்களில் மட்டும் 40 இற்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*ரயில்வே ஊழியர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், அவர்கள் மறைமுகப் பணிகளிலும், கூடுதல் பணிகளிலும் ஈடுபடவேண்டியுள்ளது. இதனால், ரயில்வே ஊழியர்கள் வார இறுதி நாட்களிலோ, மாத இறுதியிலோ பணிக்கு வருவதில்லை. காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படாமை, பதவி உயர்வு வழங்காமை போன்ற பல காரணங்களால் இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*(அ)*

# பொலிஸில் முறைப்பாடு செய்வதாக அச்சுறுத்தியதில் சிறுமி உயிர்மாய்ப்பு

*கொழும்பு, நவ. 02*

*பொலிஸில் முறைப்பாடு செய்வதாக கூறியமையால் சிறுமி ஒருவர் உயிர்மாய்த்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இவருக்கு மேலும் மூன்று இளம் சகோதரர்கள் உள்ள நிலையில் இவர்கள் அயல் வீட்டுச் சிறுவர்களுடன் விளையாடுவது வழக்கம்.*

*ஒரு நாள் சிறுவர்கள் வழக்கம் போல் விளையாடிக் கொண்டி ருக்கும்போது சிறுவர்களிடையே மோதல் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கியுள்ளனர்.*

*இதனையடுத்து இரு வீட்டாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு இரு வீடுகளுக்கும் இடையில் வேலி அமைக்கப்பட்டுள்ளது.*

*பின்னர் தாக்கப்பட்ட அயல் வீட்டுச் சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப்போவதாக சிறுமியின் தந்தையிடம் கூறியுள்ளார்.*

*இந்நிலையில், பொலிஸ் முறைப்பாடு குறித்த அச்சத்தில் சிறுமி கடிதம் ஒன்றினுடாக தனது மரணத்திற்கு அயல் வீட்டார் தான் காரணம் என எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்துள்ளார்.*

*இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.*

*(அ)*

# 9 மாதங்களில் 120 மாணவர் தொழுநோயினால் பாதிப்பு

## கொழும்பு, மட்டு மாவட்டங்கள் முதலிரு இடங்களில்

*கொழும்பு, நவ. 02*

*இலங்கையில் கடந்த 9 மாதங்களில், 14 வயதுக்கு உட்பட்ட 120 பாடசாலை மாணவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம் கூறுகிறது.*

*அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 31 ஆகும்.*

*மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 18 பாடசாலை மாணவர்களும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 11 மாணவர்களும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த காலகட்டத்தில், முழு நாட்டிலும் 1150 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.*

*(அ)*

# சீனாவை பாராட்டும் சரத் வீரசேகர எம்.பி.

*கொழும்பு, நவ. 02*

*அமெரிக்காவால் விஸா மறுக்கப்பட்டுள்ள பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, ஆசியாவின் தவிர்க்க முடியாத நம்பகமான நண்பன் சீனா என அந்த நாட்டுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*ஆசிய நாடுகளுக்கு இடையிலான பிணைப்பை நெருக்கத்தை மேற்குலகினால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது .*

*இந்த பிணைப்பு வர்த்தகம் மூலமும் முக்கியமாக பௌத்தம் மூலமும் வளர்ச்சியடைந்தது- வளர்த்தெடுக்கப்பட்டது. சீனா ஆசியாவின் தவிர்க்க முடியாத நம்பகத்தன்மை மிக்க நண்பன்.*

*மனித உரிமை பேரவையில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடான சீனா இலங்கைக்கு தொடர்ச்சியாக அளித்து வரும் ஆதரவிற்கு நாங்கள் நன்றியுடையவர்களாக உள்ளோம்.*

*உலகின் ஈவிரக்கமற்ற அமைப்பினை நாங்கள் தோற்கடித்த வேளை மேற்கு உலக நாடுகள் எங்களை குற்றவாளிகளாக்கின. ஆனால் சீனா எங்களுக்கு ஆதரவாகயிருந்தது-என்றார்.*

*(அ)*

# பாடசாலை உபகரணங்களின் விலை 10 வீதத்தால் அதிகரிப்பு

*கொழும்பு, நவ. 02*

*மின்கட்டணம் மற்றும் எரிபொருள் அதிகரிப்பு காரணமாக பாடசாலை உபகரணங்களின் விலையை 10 வீதத்தால் அதிகரிப்பதில் உற்பத்தி நிறுவனங்கள் கவனம் செலுத்தியுள்ளன.*

*நாடளாவிய ரீதியில் தமது உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் குறித்த உற்பத்தி நிறுவனங்கள் மின் கட்டணம் மற்றும் எரிபொருள் கட்டணங்களின் விலையேற்றத்தால் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றன.*

*மேலும், எரிபொருட்களின் விலை அதிகரிப்பு பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதால் விலையை அதிகரிக்காமல் நிறுவனங்களை நடத்த முடியாதுள்ளதாகவும் உற்பத்தி நிறுவனத்தினர் தெரிவித்தனர். (அ)*

# சுங்க வருமானம் உச்சத்தை எட்டியது!

*கொழும்பு, நவ. 02*

*இலங்கை சுங்கத்துக்கு கடந்த ஒக்ரோபர் மாதத்தில் கிடைத்த வருமானம் 109 பில்லியன் ரூபாவை தாண்டியுள்ளது.*

*இது ஒரு மாதத்தில் சுங்கம் ஈட்டிய அதிகூடிய வருமானம் என சுங்கப் பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.*

*மேலும், வரி வசூல் செயல்முறையை முறைப்படுத்தியமை மற்றும் செயல்திறனுடன் செயற்பட்டமை வருமானம் அதிகரிக்க முக்கியக் காரணம் என்றும் அவர் கூறினார்.*

*இந்த ஆண்டு மொத்த சுங்க வருமானம் 925 பில்லியனை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*(அ)*

‘ஷி யான் 6’ கப்பலுக்கு அனுமதி;

# அமெரிக்கா, இந்தியா கடுமையான அதிருப்தி!

கொழும்பு, நவ. 02

**‘ஷி யான் 6’ கப்பலுக்கு நேற்று முன் தினம் முதல் கடல் ஆய்வுகளை நடத்த இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ள நிலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இதற்கு கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.**

**இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் சீனா தொடர்ந்து தனது அத்துமீறலையும், ஆதிக்கத்தையும் செலுத்தி வருகிறது.**

**இதற்கிடையே இந்தியா மற்றும் அமெரிக்கா எழுப்பிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் சீன ஆய்வுக் கப்பலான ‘ஷியான் 6’ கடந்த 23ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தது.**

‘ஷியான் 6’ கப்பல் இரண்டு நாள் ஆராய்ச்சியை இலங்கை கடற்கரையில் நேற்று முன் தினம் முதல் தொடங்கி உள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதியிலும், இலங்கையின் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (நாரா) மற்றும் ருஹுனு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் கவலை தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக இந்த மாத தொடக்கத்தில் பீஜிங்கில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சுவார்த்தையிலும் இந்த விவகாரம் குறித்து பேசப்பட்டது.

கடந்த செப்ரெம்பரில், இந்தியாவின் உள் நாட்டில் கட்டப்பட்ட முதல் போர்க் கப்பலான ‘ஐ.என்.எஸ். டில்லி’ இலங்கைக்கு நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டது.

கடந்த வாரம், கொரிய கடற்படையின் ரோக்ஸ், குவாங் கேட்டோ தி கிரேட்’ மற்றும் சமீபத்தில், ஜப்பான் கடல் சார் நவீன போர்க்கப்பல் இலங்கையின் வடகிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள திருகோணமலை துறைமுகத்துக்கு வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

சீனக் கப்பல்களின் வருகை குறித்து இந்தியா பலமுறை கவலை தெரிவித்து வரும் நிலையில், வெளிநாட்டுக் கப்பல்களின் வருகைக்கு நிலையான செயல்பாட்டு நடைமுறை பின்பற்றப்படும் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் தொடர் ஆதிக்கத்தின் முக்கிய நடவடிக்கையாக இலங்கையின் கடல் வளங்களை ஆராய சீன ஆராய்ச்சி கப்பலை அனுப்பி வைத்துள்ளது.

இது இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகள் இலங்கைக்கு அளித்து வரும் நட்புறவில் விரிசலை ஏற்படுத்துமா? என்ற கேள்வியையும் ஏற்படுத்தி உள்ளது.

ஷி யான் 6 என்ற சீன ஆய்வுக் கப்பலுக்கு, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் ஆட்சேபனைகளை மீறியே இலங்கை கடல் ஆய்வுகளை நடத்த அனுமதி வழங்கியுள்ளது.

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலுக்கு இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கை அனுமதி வழங்குவது இரண்டு வருடங்களில் இது இரண்டாவது தடவையாகும்.

இந்தக் கப்பல் கொழும்பு பெந்தர கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நாராவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமல் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

(அ)

# வைத்தியசாலை நடவடிக்கைகள் மின்னல் தாக்கத்தினால் பாதிப்பு

கொழும்பு, நவ. 02

வெலிசறை இருதய வைத்தியசாலையில் நேற்று முன் தினம் மின்னல் தாக்கியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் டி.எல்.வனிகரத்ன தெரிவித்தார்.

இதனால் வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவில் இருந்த அத்தியாவசிய இயந்திரங்கள் பல சேதமடைந்துள்ளதோடு மின்னல் தாக்கத்தினால் வைத்தியசாலையின் கணினி அமைப்பும் முற்றாக செயலிழந்துள்ளதாக பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

மின்னல் தாக்கத்தின் பின்னர் வைத்தியசாலையின் எக்ஸ்ரே இயந்திரங்கள் இயங்காததால் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு மேற் கொள்ளப்படும் சி.ரி. ஸ்கான் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு தற்போது வைத்தியசாலையின் கணினி அமைப்பை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வெலிசறை இருதய வைத்தியசாலையின் ஒரு பகுதியில் மாத்திரமே மின்னல் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த பணிப்பாளர், வைத்தியசாலையில் மின்னல் தாக்கியதால் ஊழியர்களுக்கோ, நோயாளர்களுக்கோ பாரிய விபத்து எதுவும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

(அ)

# தினேஷ் ஷாப்டரின் மரணம் ஒரு கொலை

## நீதிமன்று நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 02

வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் கழுத்து மற்றும் முகத்தில் விடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே ஏற்பட்டதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, இந்தச் சம்பவத்தின் மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாகத் தீர்ப்பளித்த நீதவான், சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சி.ஐ.டிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கைகளை பரிசீலித்த நீதவான் இதனை அறிவித்தார்.

கழுத்து மற்றும் முகத்தில் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே அவரது மரணம் பதிவாகியுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தினேஷ் ஷாப்டரின் மரணம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட 5 பேர் கொண்ட நிபுணர் குழு குறித்த அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# விவசாயிகள் ஒத்துழைப்பால் மேலதிக அரிசி கையிருப்பில்!

கொழும்பு, நவ. 02

விவசாயிகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் மேலதிக அரிசி கையிருப்பைப் பேண முடிந்துள்ளதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டுக்கு தேவையான மொத்த அளவில் 40 சத வீதமான பால் இதுவரையான காலமும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விவசாய அமைச்சரினதும் விவசாயிகளினதும் ஒத்துழைப்புடன் அரிசியில் தன்னிறைவை அடைந்து, மேலதிக அரிசி உற்பத்தியைப் பேண முடிந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற தேவையற்ற அச்



சம் கொள்ளத் தேவையில்லை. கால்நடை அமைச்சும் மக்களுக்கு தேவையான அளவு புரதத்தை வழங்கக்கூடிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

கடந்த காலத்தில், 40 சதவீதமான பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு பால் உற்பத்தியை இரட்டிப்பாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேய்ச்சல் தரைகளை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# மின்சார உற்பத்தி நிலையங்களை தனியாருக்கு வழங்க ஆலோசனை?

கொழும்பு, நவ. 02

மின் உற்பத்தி நிலையங்களைத் தனியாருக்கு வழங்குவது குறித்து ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனவரி மாதம் முதலாம் திகதி ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஜூலை மாதம் முதலாம் திகதி ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆகிய திகதிகளில் மின் கட்டண திருத்தங்களை மேற்கொள்ள அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆனாலும் ஒக்ரோபர் மாதத்தில் மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டதால் ஜனவரி மாதத்தில் திருத்தம் மேற்கொள்ளாமல் அடுத்த வருடத்திற்கான முதலாவது கட்டண திருத்தத்தை ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

மின்சாரதுறையில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்கள் குறித்து குறித்த துறையில் உள்ள உயர்மட்ட அதிகாரிகளுடன் கடந்த 10 மாதங்களில் பல்வேறு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம்.

இதன்மூலம் ஊழியர்களுக்கு பிழையான கருத்து ஒன்று உட்புகுத்தப்படுகின்றது.

அனைத்து நீர்மின் உற்பத்தி நிலையங்களும் வெளிநாட்டு மூதலீட்டாளர்களுக்கு வழங்கப்படப்போவதாகவும் ஆதாரமற்ற தகவல்களை கூறுகின்றார்கள்.

இவ்வாறான யோசனை ஒன்று இந்த புதிய சட்டமூலத்தில் இருந்தால் எனக்கு காண்பிக்குமாறு நான் சவால் விடுக்கின்றேன்.

100 வீதம் நீர் மின் உற்பத்தியானது நம் நாட்டு அரசாங்கத்தின் கீழேயே செயற்படும் என்று மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் ஏனைய மின் உற்பத்தி நிலையங்களை தனியாருக்கு வழங்குவதா அல்லது அரசாங்கத்தின் கீழ் செயற்படுத்துவதா என்பது குறித்து கலந்தாலோசிக்கப்படுகின்றது.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைளின் ஊடாக நாட்டில் மின் உற்பத்தியை அதிகரிக்கவும் மக்களின் சுமைகளை குறைக்கவுமே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

(அ)

# நாட்டில் சனத்தொகை கணக்கெடுப்பு ஆரம்பம்!

கொழும்பு, நவ. 02

பத்து வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதல் கணக்கெடுப்பு ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதலாவது கட்டடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு குடிசன மதிப்பீட்டில் தரவு சேகரிப்புக்கு அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் ரப்லெட் கணினிகள் பயன்படுத்துவது விசேட அம்சமாகும்.

இதேவேளை, இறுதியாக சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு 2012 இல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உல்லாசப் பயணிகளால் நிரம்பும் பொத்துவில் அறுகம்பே பிரதேசம்

அம்பாறை, நவ. 02

**பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு பெருந் தொகையான உல்லாசப் பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.**

**வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள் தமது பொழுதினைக் கழிப்பதற்காக இப் பிரதேசத்திற்கு படை எடுத்து வருகின்றனர்.**





கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கடற்கரைப் பகுதிகள் சர்வதேச அரங்கில் தனக்கென தனியோர் இடத்தினைப் பெற்றிருக்கின்றன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறுகம்பே கடற்கரைப் பிரதேசதம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதால் தினமும் இப்பிரதேசத்திற்கு ஆயிரக்கணக்கானோர் தமது பொழுதினைப் போக்குவதற்காக வருகை தருகின்றனர்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த இப்பிரதேச சுற்றுலாத்துறை தற்போது மீளெழுச்சி பெற்று வருவதனால் இப் பிரதேசத்தின் துறைசார்ந்த மக்களின் வாழ்வாதார விருத்தி ஏற்பட்டு வருவதுடன் வர்த்தக பொருளாதார ரீதியிலான மேம்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இங்கு வருகை தருபவர்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காகவும் கடலலை விளையாட்டில் ஈடுபடுபவர்களையும் பாதுகாப்பதற்கென அரச பாதுகாப்புப் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருகையினைப் போல் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் இப்பகுதிக்கு விருப்புடன் வருகை தருகின்றனர்.

இதனால் அறுகம்பே பிரதேசத்தில் ஏராளமான உலகத் தரம் மிக்க நட்சத்திர விடுதிகளும், ஹோட்டல்களும் உருவாக்கம் பெற்றிருக்கின்றன.

சர்வதேச ரீதியிலான நீரலைச் சறுக்கு விளையாட்டு இக்கடற் பரப்பில் வருடந் தோறும் இடம் பெறுவதனால் பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டு போட்டியாளர்களும் அவர்களோடு இணைந்ததாக பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் இப்பிராந்தியத்திற்கு வருகை தருவது இலங்கை நாட்டுக்கு அந்நியச் செலாவணியினை பெருமளவில் ஈட்டிக் கொள்வதற்கு வழிகோலியாகவும் அமைகின்றது.

(அ)





## தமிழ் மொழித் தினத் தேசிய மட்டப் போட்டியில் சம்மாந்துறைக்கு இரண்டு வரலாற்றுச் சாதனை

அம்பாறை, நவ. 02

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினத் தேசிய மட்டப் போட்டியில் சம்மாந்துறைக்கு இரண்டு வரலாற்றுச் சாதனைகள் கிடைத்துள்ளன.

இவ்வருடத்துக்கான அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டியில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்தாம் பிரிவு இலக்கிய விமர்சனப் போட்டியில் போட்டியிட்ட சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலை மாணவி அல் - ஹாபிழா ஏ. தபானி அபா முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

அதேவேளை, முதலாம் பிரிவு வாசிப்புப் போட்டியில் போட்டியிட்ட சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவன் என். றுஹைமி முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தங்கப்பதக்கம்களையும் சான்றிதழ்களையும் கல்வி அமைச்சின் தமிழ் மொழிபிரிவுப் பணிப்பாளர் சு.முரளிதரன் வழங்கினார்.

## மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பழைய மாணவர்கள் ஏற்பாட்டில் இரத்ததானம்



மட்டக்களப்பு, நவ. 02

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்த வங்கிகுருதி குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு புனித மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் 2015 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இரத்த தான நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த இரத்ததான நிகழ்வில் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் தாதியர் கற்கை மாணவர்கள், கல்லடி சிவானந்தா மற்றும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் திருமதி பிரஷ்னவி தலைமையிலான குழு இந்த இரத்ததான நிகழ்வில் குருதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டது.

கல்லூரியின் அதிபர் கே. பாஸ்கர், பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் யூ. மயுரன் உள்ளிட்ட மாணவர் சங்கத்தின் பல பிரதிநிதிகளும் அங்கு பிரசன்னமாக இருந்தனர். (அ)

# கிண்ணியா வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருமலை, நவ. 02

கிண்ணியா தள வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் நேற்று காலை 7.00 முதல் 12:00 மணி வரை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலதிக நேர கொடுப்பனவு, ஆடைக் கொடுப்பனவு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல பிரச்னைகளை முன்வைத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது. ஆனால் எங்களுடைய சம்பளம் மட்டும் உயர்த்தப்படவில்லை.

ஏனைய ஊழியர்களுக்கு போன்று எங்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

மேற்படி பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது. இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்து அவர்கள் இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




இதேவேளை, வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பலர் தமது வைத்திய தேவையை பெற்றுக் கொள்ளகொள்ள முடியாது பல்வேறு அசௌகரிங்களை எதிர்நோக்கினர்.

தீவிர மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளையும், விசேட கிளினிக் பிரிவுகளையும் தவிர வெளி நோயாளர் பிரிவு உட்பட ஏனைய பகுதிகளும் இயங்கவில்லை.

இதனால் சிகிச்சை பெறுவதற்காக வந்த நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது திரும்பிச் சென்றனர்.

மிகத் தூர இடங்களில் இருந்து வந்த சிலர் 12:00 மணிக்கு பிறகு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் தரித்து நின்றனர். (அ)

# அகதி முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்

## 120பேர் கொல்லப்பட்டனர்



ஜெருசலேம், நவ. 02

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் 26 ஆவது நாளாகவும் நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன் தினம் ஜபாலியா அகதிமுகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் அதிகளவில் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.**

120 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என இந்தோனேசிய மருத்துவமனையின் சத்திரகிசிச்சை இயக்குநர் முகமட் எல் ரொான் தெரிவித்துள்ளார்.

பெண்களும் குழந்தைகளுமே அதிகளவில் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அவர் காயமடைந்த பெருமளவானவர்கள் சிகிச்சை பெறுவதை காண்பிக்கும் படங்களை வெளியிட்டடார்.

கடும் காயமடைந்தவர்களிற்கு மேலதிக சத்திரகிசிச்சையை வழங்கவேண்டியிருந்ததால் தாக்குதல்களிற்கு மத்தியில் காசாவின் அன்ஸிபா மருத்துவமனைக்கு அனுப்பவேண்டிய நிலையேற்பட்டது என அவர் கூறினார். (அ)

# உக்ரைன் ஜனாதிபதியின் வீட்டை ஏலத்தில் விற்ற ரஷ்ய அதிகாரிகள்



மொஸ்கோ, நவ. 02

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியின் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டை ரஷ்ய அதிகாரிகள் ஏலத்தில் விற்பனை செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விடுமுறைக்காலங்களில் கிரைமியாவில் உள்ள வீட்டில்தான் ஸெலென்ஸ்கியின் குடும்பத்தார் ஓய்வெடுப்பர்.

இந்நிலையில், குறித்த பகுதியிலுள்ள ஜெலென்ஸ்கிக்கு சொந்தமான வீட்டை ரஷ்ய அதிகாரிகள் இவ்வாண்டின் தொடக்கத்தில் கைப்பற்றினர்.

இதனையடுத்து கிரைமியாவில் உக்ரேனிய அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கியின் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டை ஆக்கிரமிப்பு ரஷ்ய அதிகாரிகள் ஏலத்தில் விற்றுவிட்டனர்.

அவ்வீட்டில்தான் விடுமுறைக்காலங்களில் ஸெலென்ஸ்கியின் குடும்பம் ஓய்வெடுக்கும் எனக் கூறப்பட்டது.

அந்த 120 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட வீடு 44.3 மில்லியன் ரூபிளுக்கு (657,000 டொலர்)விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஏலத்தில் இருவர் மட்டுமே பங்கேற்றிருந்த நிலையில், தொடக்க விலையை விட இரு மடங்கிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் போரில் 3,320 சிறுவர்கள் உயிரிழப்பு!

காஸா, நவ. 02

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் 3 ஆயிரத்து 320 குழந்தைகள் - சிறுவர்கள் உயிரிழந்தனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலை தொடர்ந்து, காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.

இந்த மோதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதற்கிடையே, போரில் அப்பாவி பொதுமக்கள் குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் அதிகளவில் பாதிக்கப்படுவதால் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நாவும் உலக நாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால், போர் நிறுத்த அழைப்பை இரு தரப்பும் நிராகரித்து வருகின்றன.

இந்த நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் போரில் காஸாவில் இதுவரை 8 ஆயிரத்து 119 பேர் உயிரிழந்தனர். இதில் 3 ஆயிரத்து 320 குழந்தைகள் - சிறுவர்கள் ஆவர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# நைஜீரியாவில் படகு விபத்து; 17 பேர் மரணம் 73 பேர் மாயம்!



நைஜர், நவ. 02

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஆற்று வழியாகச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகு கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர் 73 பேர் மாயமாகினர்.

அந்த நாட்டின் அர்டோ-கோலா மாகாணத்தில் பென்யூ நதி வழியாக 100இற்கும் மேற்பட்டோரை ஏற்றிக்கொண்டு சனிக்கிழமை சென்றுகொண்டிருந்தபோது அந்தப் படகு திடீரெனக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

விபத்து பகுதியிலிருந்து 14 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். மாயமாகியுள்ள 73 பேரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அவர்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதால் இந்த விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 90ஐ நெருங்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நைஜீரியாவில் போதிய சாலை வசதிகள் இல்லாததால் அங்கு நீர்வழிப் போக்குவரத்து அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இருந்தாலும், அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வது, போதிய பராமரிப்பு இல்லாதது போன்ற காரணங்களால் அங்கு அடிக்கடி படகு விபத்துகள் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 17 இலட்சம் அகதிகளை வெளியேற்றும் பாகிஸ்தான்!



இஸ்லாமாபாத், நவ. 02

உரிய ஆவணங்களின்றி தங்கள் நாட்டில் தங்கியிருக்கும் 17 இலட்சம் ஆப்கானியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு அகதிகளை கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கைகள் இன்று புதன் கிழமை தொடங்கும் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இது குறித்து உள்துறை அமைச்சர் சர்ப்ராஸ் புக்தி கூறுகையில், பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் அகதிகள் செவ்வாய்க்கிழமைக்குள் வெளியேற வேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தோம்.

இதனை ஏற்று, சுமார் 20 ஆயிரம் அகதிகள் மட்டுமே நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். புதன்கிழமையிலிருந்து எஞ்சியுள்ள அந்நியர்களை பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கும். இந்த நடவடிக்கை படிப்படியாக நிறைவேற்றப்படும் என்றார் அவர்.

1979-89 காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்தது. அப்போது, அங்கிருந்து ஏராளமான அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர். அதன் பிறகு நடைபெற்ற போர்களின் போதும் ஆப்கன் அகதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்து வந்தது.

எனினும், ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அந்த நாட்டு அகதிகள்தான் காரணம் என்று பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அனைத்து அகதிகளும் ஒக்ரோபர் 31இற்குள் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு இந்த மாதத் தொடக்கத்தில் உத்தரவிட்டது. (ஐ)

# போர் நிறுத்தம் ஒருபோதுமே இல்லை அது ஹமாஸிடம் சரணாவதற்கு சமம்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

டெல் அவிவ், நவ. 02

போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல் ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் குழுவுக்கும் இடையே ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் போர் நடக்கிறது. இன்னும் சுமுகமான தீர்வு எட்டப்படவில்லை. பொது மக்கள் உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் காஸா வீதிகளில் அலையும் படங்கள் வெளியாகி பலரையும் கவலையில் ஆழ்த்துகின்றன.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு டெல் அவிவில் செய்தியாளர்களை சந்தித்தார். அவர்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில், “காஸாவில் போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகிறேன். போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. பயங்கரவாதத்துக்கு அடிபணிவது போல ஆகிவிடும். இது நடக்காது ஹமாஸால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்க சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்.

பேர்ள் ஹார்பர் தாக்குதல், இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பிறகும் அமெரிக்கா போர் நிறுத்தத்தை நிராகரித்தது. அதே போன்று இஸ்ரேல் மீது ஒக்ரோபர் 7 ஆம் நாள் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் போர் நிறுத்தம் என்பதை ஒப்புக்கொள்ள இயலாது. இந்தப் போரில் வெற்றி பெறும் வரை இஸ்ரேல் போராடும்” என கூறியுள்ளார். (ஐ)

# முல்லை மாவட்ட வைத்தியசாலையில் சுகாதார பணியாளர்கள் பகிஷ்கரிப்பு!

முல்லைத்தீவு, நவ. 02

**சம்பள உயர்வு உட்பட ஒன்பது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சுகாதார பணியாளர்கள் பணிபகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.**



நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளில் சுகாதார ஊழியர்கள் நேற்று தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களும் காலை ஏழு மணி தொடக்கம் மதியம் 12:00 மணி வரை தொழிற்சங்க நடவடிக்கையில் குதித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, வெலிஓயா, ஒட்டுசுட்டான், மல்லாவி, மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மக்களுக்கு சேவை ஆற்றிவரும் அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் சிற்றூழியர்கள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

(அ)

# பொன்சேகாவை நீக்கும் திட்டம் எதுவும் இல்லை!

## கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, நவ. 02

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்குவது குறித்தோ அல்லது அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்தோ கட்சிக்குள் எந்தக்கலந்துரையாடலும் இடம்பெறவில்லை."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு:

சரத் பொன்சேகா ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக விண்ணப்பிக்கவில்லை, கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனச் செயற்குழு தீர்மானித்துள்ளது, அந்தத் தீர்மானத்தில் மாற்றம் இல்லை.

கட்சியின் உயர்மட்ட குழுவொன்று பொன்சேகாவை சந்தித்து பேச்சு நடத்தியது. எனவே, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது-என்றார்.

(அ)

# கிளிநொச்சி வைத்தியசாலை சுகாதார ஊழியர் போராட்டம்




கிளிநொச்சி, நவ. 02

சுகாதார ஊழியர்கள் நேற்று சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக மேற்கொண்டனர்.

2016 இன் பின் தமது சம்பளம் அதிகரிக்கப்படவில்லை, கிழமையில் ஐந்து நாட்கள் வேலை உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நேற்று மு.ப 7.00 தொடக்கம் நண்பகல் 12.00 வரை சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டணியாக அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(அ)

# பதிவாளர் திணைக்கள நிகழ்நிலை சேவை யாழ்ப்பாணத்துக்கு இல்லை!

யாழ்ப்பாணம், நவ. 02

நாடளாவிய ரீதியில் பதிவாளர் திணைக்களத்தின் நிகழ்நிலை சேவைகளுக்கு ஊடாக காணிப் பதிவு, உறுதி, புத்தகப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தின் ஊடாக நிகழ்நிலை சேவைகளைப் பெற முடியாது என்று மாவட்ட காணிப் பதிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் திணைக்களத்தின் இணையத் தளத்தின் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பலருக்கு நீண்ட காலமாகப் பதிலேதும் கிடைக்காத நிலையில், பதிவாளர் நாயக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, நாடளாவிய ரீதியில் - நாட்டிலுள்ள சகல காணிப் பதிவகங்களின் ஊடாகவும் நிகழ்நிலை சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நிகழ் நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அந்தந்தக் காணிப் பதிவகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் உள்ள காணிப் பதிவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

பதிவாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, யாழ்ப்பாணத்தில் அத்தகைய சேவைகள் எதையும் நிகழ்நிலை ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும், தேவையாயின் நேரில் வருமாறும் காணிப் பதிவகத்தின் பிரதம எழுதுவினைஞர் தெரிவித்துள்ளார். நேரத்தையும், மனித வலுவையும் மாதப்படுத்தும் வகையில் அரசாங்கம் பல வழிகளில் நிகழ்நிலையூடாக இலகுபடுத்தல்களை ஆரம்பித்துள்ள போதிலும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் தொழில்நுட்ட அனுகூலங்களை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பதிவாளர் நாயகத்துக்கு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(அ)

# வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னெடுங்கள்

## ஆளுநரை வலியுறுத்துகிறார் அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 02

வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு, அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 25.09.2014 ஆம் திகதி 16ஆம் அமர்வில் ஆண்டு தோறும் வரும் நவம்பர் மாதத்தை மரநடுகை மாதமாக பிரகடனப்படுத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாண சபையின் விவசாயத் ட் திணைக்களத்தின் மூலம் இச் செயற்பாட்டை இவ்வருடமும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன் என அவைத் தலைவர் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸுக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

(அ)

# வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணி ஆரம்பம்



முல்லைத்தீவு, நவ. 02

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தயாராகி வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதானப் பணிகள் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக் குழுவினரால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

முன்னதாக மாவீரர் களுக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தி இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும், அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்தனர்.

(அ)

# லுணுவில பாடசாலை வாயிலுக்கு அருகே நிர்வாண நிலையில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ. 02

லுணுவில, தெமட்டபிட்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றின் வாயிலுக்கு அருகில் இருந்து நிர்வாணமாக காணப்பட்ட ஆணின் சடலத்தை நேற்று முன் தினம் காலை மீட்டுள்ளதாக மாரவில தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வென்னப்புவ தும்மலதெனிய பகுதியைச் சேர்ந்த அசேல பெரேரா என்ற 43 வயதுடையவர் ஆவார்.

இவர் தலையில் பலத்த காயத்துடன் இரத்தம் கசிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்திற்கு அருகே மோட்டார் சைக்கிளின் தலைக்கவசம் ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாரவில தலைமையக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

## ஜனாதிபதி....

பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சில முறுகல்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் வரவு - செலவுத் திட்டத்தில் சில அமைச்சுகள் மீதான ஒதுக்கீடுகளை தோற்கடிக்கும் நோக்கில் பொதுஜன பெரமுனவுக்குள் குழுவொன்று செயல்பட்டு வருவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பித்தக்கது. (அ)

## மல்வத்தை....

வலுவான தொடர்பை மீண்டும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இன்று இலங்கையில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய ஒளி மின்சாரம் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்திற்காக, புத்த மத உறவுகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 107.47 கோடி ரூபாய் இந்திய மத்திய அரசின் மானியத்தில் 82.40 கோடியை இந்தியா ஒதுக்கும் என்று இந்திய நிதி அமைச்சகம் தனது அதிகாரபூர்வ ருவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் வழங்கிய பொருளாதார உதவிகளுக்கு நன்றி தெரிவித்த திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், இலங்கையின் நம்பிக்கைக்குரிய நண்பராக இந்தியாவே இலங்கைக்கு உடனடியாக உதவ முன்வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். (அ)

## மன்னிப்பு....

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு, ஜயந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானம் கடந்த 21 ஆம் திகதி தரைமட்டமாக்கப்பட்டது.

அங்கு எனது தாயின் சமாதியும் உள்ளதால், பொலிஸாருடன் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன்.

இதன்போது சிலர் என்னை தூண்டும் வகையில், காணொளிகளை எடுக்க ஆரம்பித்தமையால், நானும் கோபத் தில் சில கருத்துக்களை வெளியிட்டிருந் தேன்.

இதனை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், தமிழ் மக்களை குழப்புவதற்காக பயன்படுத்தி வருகிறார்கள்.

நான் கூறிய கருத்துக்கள் இனவாதத்தை தூண்டும் கருத்துக்கள் என தமிழ் மக்களிடம் கூறிவருகிறார்கள்.

விசேடமாக, கூட்டமைப்பின் உறுப்பினர் இரா. சாணக்கியன், இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், நான் ஒரு பைத்தியக்காரன் என்றும் எனது தாயின் சமாதி இங்கே இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்தே, சாணக்கியன்தான் இந்த மயானத்தை உடைக்க பணித்துள் ளார் என நான் தெரிந்துக் கொண்டுள் ளேன்.

அப்படி அவர் செய்யாவிட்டால், இந்த செயற்பாட்டை ஏன் அவர் சரியாக காண்பிக்க முற்பட வேண்டும்?

இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு சென்றபோது, மயானத்தை தரைமட்டமாக்கிய தரப்பினர் குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, மீண்டும் மயானத்தை அமைத்துத் தருவதாகவும் கூறியுள்ளனர்.

நானும், தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக நீதிமன்றத்திடம் அறிவித்தேன். நான் கவலையுடன் தான் அன்று அவ்வாறு பேசினேன்.

இது இனவாதக் கருத்து கிடையாது. தனி ஈழம் வரப்போவதாக தெரிவித்து, தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காகவே சில நபர்கள் இவற்றை பயன்படுத்துகிறார்கள்.

இதனை அனைத்து மக்களும் புரிந்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## சம்பந்தன்....

தமிழரசுக் கட்சியின் விவகாரத்தை அந்தக் கட்சி சார்ந்தவர்களே தீர்மானிக்க வேண்டும். மேலும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்னைகளை தீராப் பிரச்னையாக வைத்திருக்கும் மனோ நிலையை கைவிட்டு, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தீர்ப்பதற்கான உளப்பூர் வமான செயற்பாட்டை வெளிப்படுத்த முன்வராத வரையில், அவ்வாறான கட்சிகளுக்கு தலைவராக யார் செயற் பட்டாலும், ஏமாற்றத்தை தவிர வேறு எதுவும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

ஏனெனில், எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுத் தருகின்றவர்களாக அரசியல் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர் பார்ப்பாக இருக்கின்றது - என்றார். (அ)

## தலைமன்னார்....

தலைமன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தக் கப்பல் சேவையை இலாப மீட்டும் செயற்றிட்டமாக மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடப்படுவதாகவும் கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர கூறினார்.

துறைமுகமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தலைமன்னாரின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

## வீதி....

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

வீதி விபத்துக்களால் உலகின் ஏதாவது ஓர் இடத்தில் 42 செக்கன்களுக்கு ஒரு முறை மரணமொன்று ஏற்படுகிறது. இருப்பினும் உயர் வருமானம் ஈட்டும் நாடுகளில் வீதி விபத்துக்கள் காரணமான ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

இலங்கையில் வீதி விபத்துக்கள் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 115 சிறுவர் மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 15-44 இளைஞர்களே வீதி விபத்துக்களில் இறக்கின்றமை அல்லது அங்கவீன மாவதை காண முடிகிறது. அத்தோடு வருடாந்தம் 3000 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழப்பதோடு அந்த எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிப்பை காட்டுகிறது.

அவற்றை ஒப்பீட்டளவில் பார்க்கும் போது எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கிலான மரணங்களும், அங்கவீனமடைதலும் வீதி விபத்துக்களினால் நிகழ முடியும் என்பதோடு, அதனால் பல பில்லியன் ரூபாய்களை நாடு இழக்க நேரிடும்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு வீதி விபத்துக்களையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனம் அடைதலையும் கட்டுப்படுத்துவதற்கான செயலணியொன்றை உருவாக்க வேண்டும்-என்றார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, தேசிய மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தலைவர் விஷேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம, இலங்கை மருத்துவச் சங்கத்தின் தலைவர் வின்யா ஆரியரத்ன ஆகியோருடன் சுகாதார, தொழில் நுட்ப, பொறியியல், போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தியும் முப்படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகள் சபை, யுனிசெப், செஞ்சிலுவை உள்ளிட்ட சர்வதேச சங்கங்களின் பிரதிநிதிகளுடன் வெளிநாட்டு தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

# சண்டிலிப்பாய் வீட்டிலிருந்து சு.கவினரை வெளியேறுமாறு பொலிஸில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 02

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சண்டிலிப்பாய் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் எனும் பெயரில் உள்ள வீட்டில் இருந்து குறித்த கட்சியினரை வெளியேறுமாறு கோரி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அலுவலகம் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆரம்பித்த அலுவலகத்தை அகற்றுமாறு வீட்டு உரிமையாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில் அவர்கள் வெளியேறவில்லை எனவும், இதனை அடுத்து வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# சிறிலங்கன் விமானசேவையை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, நவ. 02

சிறிலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

சிறிலங்கன் எயார்லைன்ஸ் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைக் கொண்டுள்ளது. இதற்கமைவாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சு



ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களைப் பயன்படுத்தி இந்த கேள்வி அழைப்புப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன - என்றார். (அ)

# சுற்றுலா பயணிகளால் களைகட்டும் கன்னியா



அம்பாறை, நவ. 02

கடந்த நான்கு நாட்கள் பாடசாலை விடுமுறை விடப்பட்டிருந்த காரணமாக திருகோணமலையிலுள்ள கன்னியா வெந்நீர் ஊற்று சுற்றுலா பயணிகளால் களை கட்டிவருகிறது.

தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் அங்கு சென்று வெந்நீர் நீராடலில் ஈடுபட்டு வருகின்றார்கள் .

இராவணன் தனது தாயாருக்காக பிதிர்க்கடன் செலுத்த இதனை விரல்களை ஊன்றி ஏழு இடங்களில் ஏழு வெந்நீர் ஊற்றுகளை உருவாக்கியதால் வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது.

காலை 7 மணி அளவில் அங்கு பிரதான வாயில் திறக்கப்படுகின்றது .

அந்த நிமிடத்தில் இருந்து தொடர்ந்து சுற்றுலா பயணிகள் ஆயிரக்கணக்கில் பயணம் செய்து அங்கு தொல் பொருள் திணைக்கள அலுவலகத்தில் 50 ரூபாய் (உள்ளூர் பயணிகள்) செலுத்தி அனுமதிச் சீட்டு பெற்று நீராடி மகிழ்ந்து வருகின்றார்கள். (அ)

## வவுனியாவில்....

செயலகம் அமைக்கப்பட வேண்டும், கமநலசேவைகள் நிலையம் அமைக்கப்பட வேண்டும், விவசாய நிலம் வழங்க வேண்டும், கிராமத்துக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பில் 6 பேர் அழைக்கப்பட்டு, பிரதமருடன் கலந்துரையாட அனுமதிக்கப்பட்டனர்.

தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த- வழக்குகளில் தொடர்புபட்டவர்கள் உள்ளிட்டவர்கள்- போகஸ்வெவவில் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மேட்டு நிலம், வயல் நிலங்கள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட போதும், இதுவரை வயல் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அந்த குடியேற்ற திட்டத்துக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, தமிழ் மக்களின் இனப் பரம்பலை சிதைக்கும் நோக்கத்துடன் இந்த விதமான குடியேற்றங்கள் இடம் பெறுவதாக தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

## திருமலைக்கு....

பணியக தவிசாளர் மதன் ஆகியோர் வரவேற்றனர்.

மேலும் ஆளுநரின் ஏற்பாட்டில் நிர்மலா சீதாராமன் இன்று திருக்கோணேச்சரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் கலந்துகொள்வதுடன், இங்கு பல முக்கிய நிகழ்வுகளிலும் பங்கேற்க உள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மாகாண மட்டத்தில் மருத்துவர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பில்!

கொழும்பு, நவ. 02

**நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளை உள்ளடக்கி மாகாண மட்டத்தில் அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே இதனை தெரிவித்தார்.

24 மணித்தியால அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்களும் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். பின்னர் வடமாகாணத்தில் உள்ள அனைத்து பொது வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 3ஆம் திகதியும், வடமேற்கு மாகாணத்தில் 6ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாணத்தில் 7ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பு அமுல்படுத்தப்படவுள்ளது.

மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் 08ஆம் திகதி வேலை நிறுத்தம் அமுல்படுத்தப்படவுள்ளது. தென் மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்களும் எதிர்வரும் 09ஆம் திகதி இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 10ஆம் திகதி மேல் மாகாண அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# இந்திய நிதி அமைச்சருக்கு இ.தொ.காவினர் வரவேற்பு!

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் பங்கேற்பு



கொழும்பு, நவ. 02

இலங்கைக்கு நேற்றுக் காலை வருகை தந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் கலந்துகொண்டார்.

மலையக மக்களுக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நாம் 200' நிகழ்வு இன்று கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பையேற்று இந்நிகழ்வில் இந்திய அரசின் பிரதிநிதியாகவே இந்திய நிதி அமைச்சர் பங்கேற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் வைத்தியசாலையிலும் சுகாதார ஊழியர்கள் போராட்டம்!




மன்னார், நவ. 02

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது "சுகாதார ஊழியர்கள் தமக்கு வாரத்தில் 5 நாட்கள் வேலையை வழங்க வேண்டும்,மேலதிக நேர கொடுப்பனவை வரையறையின்றி வழங்க வேண்டும்,மின்சார கட்டண அதிகரிப்பை இரத்து செய்யவேண்டும்" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

அத்துடன் தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை விரைவாக வழங்காதுவிட்டால் அனைத்து அவசர சேவைகளையும் பகிஷ்கரித்து போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என சுகாதார ஊழியர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் இப்போராட்டம் காரணமாக தூர இடங்களில் இருந்து வைத்தியசாலைக்கு வருகை தந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாநகர சபை அறிவித்தல்

## கோம்பயன் மணல் இந்து மயான சேவைகளுக்கான புதிய கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 1. அமரத்துவம் அடைந்தவர்களின் பூதவுடல்களை விறகில் தகனம் செய்வதற்கு | ரூபா | 5,000.00 |
| 2. (i) மின்சாரத்தில் பூதவுடல்களை தகனம் செய்வதற்கு (பெரியவர்கள் – 14 வயது முதல்) | ரூபா | 16,000.00 |
| (ii) மின்சாரத்தில் பூதவுடல்களை தகனம் செய்வதற்கு (சிறியவர்கள் – 14 வயதிற்கு உட்பட்டவர்கள்) | ரூபா | 8,000.00 |
| 3. (i) பூதவுடல்களைப் புதைத்து அடக்கம் செய்வதற்கு 14 வயது முதல் (நீதிமன்ற கட்டளைகள் / பொலிஸாரின் வேண்டுகோள் / கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் / வைத்தியசாலையின் உரிய அனுமதி கொண்டு வருவன மாத்திரம்) | ரூபா | 8,000.00 |
| (ii) பூதவுடல்களைப் புதைத்து அடக்கம் செய்வதற்கு (14 வயது வரை அடக்கம் செய்தல்) | ரூபா | 6,000.00 |
| 4. அகற்றப்பட்ட உடற்பாகங்களைப் புதைப்பதற்கு (1Kg - 30Kg வரையான பொதி) | ரூபா | 4,000.00 |
| (30Kg - 60Kg வரையான பொதி) | ரூபா | 8,000.00 |
| 5. இறந்த கால்நடைகளைப் புதைப்பதற்கு | ரூபா | 8,000.00 |
| 6. மலர்சாலையில் இருந்து கொண்டுவரப்படும் உடற்பாகக்கழிவுகள், உடைக்கழிவுகள் அகற்றுவதற்கு வாரமொன்றிற்கான கட்டணம் | ரூபா | 5,000.00 |

மேற்படி கட்டண அதிகரிப்பு 01.11.2023ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**ஆணையாளர்.**
**யாழ். மாநகர சபை.**

# பஸ் கட்டணமும் உயராது!

கொழும்பு, நவ. 02

நாட்டில் சினோபெக் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனங்கள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளன.

அதற்கமைவாக நாடளாவிய ரீதியில் டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# ஓட்டோ கட்டணம் மாறாது

கொழும்பு, நவ. 02

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்டபோதிலும் ஓட்டோ கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்குமாயின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார். (அ)

# மின் பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் உட்பட 6 பேர் கைது!

கொழும்பு, நவ. 02

அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை முன்னெடுத்த மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க உள்ளிட்ட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திவுலப்பிட்டி பகுதியிலிருந்து குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்றுக் காலை ஆரம்பமானது.

இதன் காரணமாக, கொழும்பு - திவுலப்பிட்டி பிரதான வீதியூடான போக்குவரத்து ஹொரகஸ்முல்ல பிரதேசத்தில் தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் குறித்த ஆறு பேரும் ஹொரகஸ்முல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## அரினா சபலெங்கா தோல்வி

உலக தரவரிசையில் முதல் 8 இடங்களை பிடிக்கும் வீராங்கனைகளுக்காக இடம்பெறும் டபிள்யூ.டி.ஏ. பைனல்ஸ் டென்னிஸ் போட்டி ஒன்றில் அரினா சபலெங்கா தோல்வியடைந்துள்ளார்.

ஆண்டு தோறும் நடத்தப்படும் டபிள்யூ.டி.ஏ. பைனஸ்ல் டென்னிஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீராங்கனையான அரினா சபலெங்கா, ஜெசிகா பெகு லாவிடம் நேர் செட்களில் தோல்வியடைந்தார்.

இன்று நடைபெற்ற போட்டியில் 6-4 மற்றும் 6-3 என்ற நேர் செட்களில் உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா வெற்றி பெற்றார்.

இதற்கு முன்னர் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஆரம்ப போட்டியில் சபலெங்காவும் பெகுலாவும் தலா ஒவ்வொரு வெற்றியை பெற்றிருந்தனர்.

இன்று நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தான் மோதிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ள ஜெசிகா பெகுலாவிற்கு அரையிறுதிக்கு செல்வதற்கான வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள மற்றுமொரு குழுநிலை போட்டியில் உலகின் 8 ஆம் நிலை வீராங்கனையான மரியா சக்காரியை அவர் எதிர்கொள்ளவுள்ளார்.

## வெளிநாடுகளில் விளையாடுவது போல் உள்ளது!



இந்தியாவில் உள்ள ஆடுகளங்களில் விளையாடிய அனுபவம் இல்லாததால் வெளிநாடுகளில் விளையாடுவது போன்று இருப்பதாகவும். இதுவே தொடர் தோல்விகளுக்கு காரணமாக அமைந்ததாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கிராண்ட் பிராட்பர்ன் தெரிவித்துள்ளார்.

ஐசிசி உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி தொடர்ச்சியாக 4 தோல்விகளை சந்தித்ததால் அரை இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை ஏறக்குறைய இழந்துள்ளது. அந்த அணி அரை இறுதி வாய்ப்பை பெற வேண்டுமானால் எஞ்சியுள்ள 3 லீக் ஆட்டங்களிலும் பெரிய அளவிலான வெற்றிகளை குவிக்க வேண்டும் மேலும் மற்ற அணிகளின் முடிவுகள் இவர்களுக்கு சாதகமாக அமைய வேண்டும். இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கிராண்ட் பிராட்பர்ன் கூறியதாவது:

உலகக் கிண்ண தொடரில் நாங்கள் இருக்க விரும்பாத நிலையில் இருக்கிறோம். இது எங்கள் அணியை காயப்படுத்தி உள்ளது. உலகக் கிண்ண தொடர் எங்களுக்கு வெளிநாட்டு நிலைமைகளில் உள்ளது போன்று இருக்கிறது. இதற்கு முன் எங்கள் வீரர்கள் யாரும் இந்திய மைதானங்களில் விளையாடியதில்லை. ஒவ்வொரு மைதானமும் எங்களுக்கு புதியதாகவே இருக்கிறது.

ஒவ்வொரு ஆட்டத்துக்கும்,எதிரணிக்கும், விளையாடும் இடங்களுக்கும் தகுந்த வகையில் நாங்கள் சிறப்பாகவே தயாராகிறோம். ஆனால் ஒவ்வொரு மைதானமும் எங்களுக்கு புதிதாகவே இருக்கிறது. எனினும் எங்கள் அணி வீரர்களுக்கு இருக்கும் விளையாட்டு தொடர்பான அறிவு, தரம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் பின்தங்கியதாக உணரவில்லை.

உலகக் கோப்பை போன்ற தொடருக்கான தயாரிப்பு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்குகிறது. நாங்கள் ஆறு மாதங்களுக்கு முன்பு தான் தொடங்கினோம். கிரிக்கெட் விளையாட்டை, குறிப்பாக ஒரு நாள் போட்டியை நாங்கள் விளையாட விரும்பும் வழியில் விளையாடினோம்.

கடந்த ஆறு மாதங்களில் சிலசாதகமான முடிவுகளை வெளிக்காட்டினோம். நாங்கள் வெளிப்படுத்திய சில செயல்திறன்களை நினைத்து பெருமைப்படுகிறோம். எனினும் நாங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்க சிறிது நேரம் எடுக்கிறது. விளையாடும் சூழ்நிலைகளின் சவாலுடன் பொருந்தக்கூடிய ஒரு சிறந்த கிரிக்கெட்டை விளையாட விரும்புகிறோம் - என்றார்.

# பாகிஸ்தானுக்கு இலகு வெற்றி

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் விளையாட்டரங்கில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் 6ஆவது தோல்வியைத் தழுவிய பங்களாதேஷ் முதலாவது அணியாக முதல் சுற்றுடன் உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறியது.

பங்களாதேஷினால் நிர்ணயிக்கப்பட்ட 205 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மீள் வருகை தந்த பக்கார் ஸமானின் அதிரடி அரைச் சதத்தின் உதவியுடன் 32.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்று மிகவும் அவசியமான வெற்றியை ஈட்டியது.

இந்த வெற்றியுடன் அணிகள் நிலையில் பாகிஸ்தான் 6 புள்ளிகளுடன் 5ஆம் இடத்திற்கு முன்னேறியதுடன் ஆப்கானிஸ்தானும் இலங்கையும் 6ஆம், 7ஆம் இடங்களுக்கு பின்தள்ளப்பட்டன.

அப்துல்லா ஷபிக், பக்கார் ஸமான் ஆகிய இருவரும் 127 பந்துகளில் 128 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

அப்துல்லா ஷபிக் 69 பந்துகளில் 9 பவுண்டறிகள், 2 சிக்ஸ்களுடன் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து களம் புகுந்த அணித் தலைவர் பாபர் அஸாம் வெறும் 9 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். (160 - 2 விக்.)

மொத்த எண்ணிக்கை 169 ஓட்டங்களாக இருந்த போது பக்கார் ஸமான் சிக்ஸ் ஒன்றை அடிக்க முயற்சித்து பவுண்டறி எல்லையில் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

முதல் இரண்டு போட்டிகளில் பிரகாசிக்கத் தவறியதால் அடுத்த 3 போட்டிகளில் விளையாடாமல் ஓரங்கட்டப்பட்டிருந்த பக்கார் ஸமான் 74 பந்துகளை எதிர்கொண்டு 7 சிக்ஸ்கள், 3 பவுண்டறிகளுடன் 81 ஓட்டங்களைப் பெற்றார்.



பக்கார் ஸமான் ஆட்டம் இழந்த பின்னர் மொஹமத் ரிஸ்வான், இப்திகார் அஹ்மத் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தானின் வெற்றியை உறுதிசெய்தனர்.

ரிஸ்வான் 26 ஓட்டங்களுடனும் இப்திகார் அஹ்மத் 17 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷ் 45.1 ஓவர்களில் சகல விக்கெட் களையும் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பங்களாதேஷ் முதல் 6 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்ததுடன் 23 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

இந் நிலையில் 4ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த லிட்டன் தாஸ், மஹ்முதுல்லா ஆகிய இருவரும் 79 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகத்தைக் கொடுத்தனர்.

லிட்டன் தாஸ் 45 ஓட்டங்களையும் மஹ்முதுல்லா 56 ஓட்டங்களையும் பெற்று 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர். (130 - 5 விக்.)

மத்திய வரிசையில் அணித் தலைவர் ஷக்கிப் அல் ஹசன், மெஹ்மதி ஹசன் மிராஸ் ஆகிய இருவரும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி 7ஆவது விக்கெட்டில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

ஷக்கிப் அல் ஹசன் 43 ஓட்டங்களைப் பெற்றதுடன மெஹ்தி ஹசன் மிராஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஷஹீன் ஷா அப்ரிடி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மொஹமத் வசிம் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஹரிஸ் ரவூப் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## மயிலங்காடு ஞானமுருகன் சம்பியன்



அமரர் ச.சந்திரகாந்தனின் நண்பர்களின் நிதி அனுசரணையில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமியால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன் தினம் காலை 8.00 மணியளவில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இச் சுற்றுப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமரர் சந்திரகாந்தனின் நண்பனான சட்டத்தரணி ப.ஐங்கரனும் , சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகர் மற்றும் அமரர் சந்திரகாந்தனின் பயிற்றுவிப்பாளர் கு.பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வட மாகாணத்தில் 8 வயதிற்குட்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட முதற் சுற்றுப்போட்டியான இப்போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி , மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி ,கோண்டாவில் றொனால்டோ அக்கடமி , அரியாலை யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட அக்கடமி , மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் மற்றும் வேலணை ஐயனார் அக்கடமி ஆகிய 6 அணிகள் பங்கெடுத்திருந்தன.

இறுதிப் போட்டியில் மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி விளையாடியது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 4 : 2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி அணியை எதிர்த்து கோண்டாவில் றொனால்டோ அக்கடமி அணி விளையாடியது. இதில் கோண்டாவில் றொனால்ட்டோ அக்கடமி அணி 2 : 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (அ)

## அடுத்து வரும் இரண்டு போட்டிகளிலும் வெற்றி உறுதி



நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி அடுத்து விளையாட உள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று முதல் 4 அணிகளில் ஒன்றாக தொடரை நிறைவு செய்யும் என பாகிஸ்தான் அணியின் ரசிகர் காஸி மோஷின் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டிக்கு முன்னதாக இந்த தொடரில் இந்தியா, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் அடுத்தடுத்து தோல்விகளை தழுவி இருந்தது. இந்த சூழலில் தற்போது வெற்றி பெற்றுள்ளது. அடுத்ததாக நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுடன் விளையாட உள்ளது.

“நாங்கள் நீண்ட காலமாக பாகிஸ்தான் அணி ஆதரித்து வருகிறோம். அதனால் பாகிஸ்தான் அணி வீழ்ச்சி காணும் போது அதே அளவிலான வேகத்தில் எழுச்சி காணும் என்பதை நாங்கள் அறிவோம். அந்த வகையில் இந்த தொடரில் எஞ்சியுள்ள இரண்டு போட்டிகளிலும் நாங்கள் வெற்றி பெறுவோம். அதன் மூலம் முதல் நான்கு அணிகளில் ஒன்றாக நாங்க இடம் பெறுவோம்” என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ரசிகர் காஸி மோஷின் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் விமான நிலையம் முற்றுகை: இஸ்ரேல் விமானம் சுற்றி வளைப்பு!










ரஷ்யாவின் விமான நிலையம் ஒன்றை யூத எதிர்ப்பு கூட்டம் முற்றுகையிட்டதற்கு யுக்ரேன் மற்றும் மேற்கு நாடுகளே காரணம் என ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் கூறியதை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு ரஷ்யாவின் மகாச்காலா விமானநிலையத்தை நூற்றுக்கணக்கான நபர்கள் முற்றுகையிட்ட வீடியோ ஒன்று , சமூக ஊடகங்களில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் இருந்து ரஷ்யாவுக்கு ஒரு விமானம் வந்தபோது கோபமடைந்த ஒரு கூட்டம் விமான ஓடுதளத்துக்கே சென்றது. அங்கே இஸ்ரேலில் இருந்து வந்த விமானத்தை சுற்றி வளைத்தது.

சமூக ஊடகங்களில் வெளியான வீடியோக்களை பார்க்கும்போது நூற்றுக்கணக்கான நபர்கள் கையில் பாலத்தீன கொடியுடன் கதவுகள் மற்றும் ஜன்னல்களை அடித்து நொறுக்கினர். அப்போது கூட்டத்தில் பலர் யூத இன வெறுப்பு கோஷங்களை எழுப்பினர், வேறு சிலர் அல்லாஹூ அக்பர் என கோஷங்களை எழுப்பினர்.

விமான நிலைய அதிகாரிகளிடம் யூதர்கள் எங்கே எனக்கேட்டு அவர்களை தேடிச் செல்வது போன்ற காட்சிகளும் வீடியோவில் இடம்பெற்றுள்ளன.

ஒய்நெட் ஊடகத்திடம் பேசிய ஒரு இஸ்ரேல் பயணி, விமானத்தில் இருந்து இறங்கி பேருந்தில் சென்ற பயணிகள் ஒவ்வொருவரிடமும் வன்முறையாளர்கள் நீங்கள் முஸ்லீமா அல்லது யூதரா என விசாரித்ததாகவும், அந்த விமானத்தில் இருந்த பல யூதர்களுக்கு நல்லவேளையாக ரஷ்ய மொழி பேச தெரிந்திருந்ததால் தப்பித்ததாகவும் கூறியுள்ளார். அந்த பேருந்தில் மரணத்தை பார்த்தேன் என அவர் கூறியுள்ளார்.

விமான நிலையத்திற்கு வெளியே பயணிகள் வீடு திரும்பும்போது, போராட்டக்காரர்கள் கார்களை மறித்து ஆவணங்களை பரிசோதித்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புப் படையினர் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்ததாக ரஷ்ய விமான போக்குவரத்து அதிகாரிகள் கூறுகின்றனர். ஞாயிற்றுக்கிழமை இரவு விமான நிலையம் மூடப்பட்டு, பிறகு திங்கட்கிழமை காலை திறக்கப்பட்டது. இஸ்ரேலில் இருந்து வடக்கு காகசஸ் பிராந்தியத்திற்கு வரும் விமானங்கள் தற்காலிகமாக அருகில் உள்ள நகரங்களுக்கு திருப்பிவிடப்பட்டன.

இந்த சம்பவத்தில் இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சில காவல்துறை அதிகாரிகள் உள்பட 20 பேர் காயம் அடைந்ததாகவும் அதில் இருவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் ரஷ்ய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவில் இந்த சம்பவம் எப்படி நிகழ்ந்தது?**

டாஜஸ்தான் என்பது ரஷ்யாவில் வடக்கு காகசஸ் பிராந்தியத்தில் உள்ள ஒரு இஸ்லாமிய ரஷ்ய குடியரசு. இங்கே 31 லட்சம் பேர் வசிக்கின்றனர். பல்வேறு இனக் குழுக்கள் இங்கே வசிக்கின்றனர். இது முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் ஒரு பகுதியாக உள்ளது. இங்கு பழங்காலத்தில் இருந்தே யூதர்களும் கணிசமாக வாழ்கின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி போராட்டக்காரர்கள் விமான நிலையத்தில் ஒன்றுகூட சமூக ஊடகம் பெரிதும் உதவியிருக்கிறது. இந்த முற்றுகையின் பின்னணியில் மார்னிங் டாஜஸ்தான் (Morning Dagestan) எனும் பிரபலமான டெலிகிராம் சேனல் ஒன்று உள்ளது.

மார்னிங் டாஜஸ்தான் ஒரு ரஷ்ய எதிர்ப்பு இஸ்லாமிய சேனலாகும். ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதே எங்களது நோக்கம் என இதன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இந்த சேனலில் யுக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு மற்றும் இஸ்ரேல் பாலத்தீன மோதல் குறித்த செய்திகள், ஹமாஸ் ஆயுத குழுவுக்கு ஆதரவான செய்திகள் உள்ளன. இந்த சேனலில் 65 ஆயிரத்துக்கு மேற்பட்ட சப்ஸ்கிரைபர்கள் உள்ளனர்.

மார்னிங் டாஜஸ்தான் குழுவை பிபிசி ஆராய்ந்தபோது, இந்த முற்றுகை போராட்டம் எவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

விமான நிலைய போராட்டத்திற்கு மார்னிங் டாஜஸ்தான் சேனலில் அழைப்பு விடுக்கப்பட்டதோடு போராட்டக்காரர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

டெல் அவிவில் இருந்து விமானம் ஞாயிற்றுக்கிழமை, உள்ளூர் நேரப்படி இரவு 7 மணிக்கு தரையிறங்கலாம். எதிர்பாராத பார்வையாளர்களை சந்திக்கலாம் என யூதர்களை குறிப்பிட்டு செய்தி பகிரப்பட்டுள்ளது.

விமானத்தில் இருந்து பயணிகள் வெளியே வரும்போது விமான நிலையத்தை விட்டு வெளியேறும் பகுதியை சுற்று ஒரு குழுவாக கூட வேண்டும்.

விமானத்தில் இருந்து வருவோரை ஒவ்வொருவராக வெளியே அனுப்ப வேண்டும். இஸ்ரேலை சபித்து முழக்கம் எழுப்ப வேண்டும். பிறகு அங்கிருந்து கலைந்து செல்லலாம். இஸ்ரேலை சபிக்க அனுமதி மறுக்கப்பட்டால் விமான நிலையத்தை முற்றுகையிடலாம்.

பயணிகளின் முகங்களை புகைப்படம் எடுத்து, அவர்கள் செல்லும் கார்களை பிந்தொடர்ந்து டாஜஸ்தானில் எங்கே தங்குகிறார்கள் என்கிற விபரத்தையும் நாம் சேகரிக்க வேண்டும் என போராட்டக்காரர்களுக்கு மார்னிங் டாஜஸ்தான் சேனலில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது..

முன்னதாக இந்த சேனலில் வெளியிடப்பட்ட செய்திகளில் இருபது லட்சம் முஸ்லிம்களுக்கு ஆதரவாக மகாச்காலா உள்ளிட்ட பகுதிகளில் பேரணியில் திரள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததது. இந்த சேனலில் யூத இன வெறுப்பு செய்திகளும் இடம்பெற்றிருந்தன. உள்ளூர் மக்கள் யூதர்களுக்கு வாடகைக்கு வீடு தொடக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தது.

**யுக்ரேனில் உள்ள ரஷ்யாவின் முன்னாள் எம்.பி. கூறுவது என்ன?**

2016 ஆம் ஆண்டு யுக்ரேனுக்குத் தப்பிச் சென்று அங்கேயே குடியுரிமையையும் பெற்ற ரஷ்யாவின் முன்னாள் எம்.பி. இலியா பொனோமரேவ் உடன் மார்னிங் டாஜஸ்தான் சேனல் தொடர்புபடுத்தப்படுகிறது.

ரஷ்யாவில் போராட்டங்களை நடத்துவது, மற்றும் விளாதிமிர் புடின் ஆட்சியை அகற்றுவது தொடர்பாக பல சமூக ஊடக சேனலை போனோமரெவ் நடத்தி வருகிறார். சில காலம் முன்பு, டாஜஸ்தானி உள்ள இஸ்லாமிய குழு ஒன்று, தன்னை தொடர்பு கொண்டதாகவும், யுக்ரேன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பை கண்டித்து பேரணி நடத்தவும் அதற்கு நிதியளிப்பதற்கும் உதவியதாகவும் ஆனால் 2002 செப்டம்பர் மாதத்தோடு அந்த சேனலுடனான தொடர்பை துண்டித்துவிட்டதாக திங்கட்கிழமை போனோமரெவ் கூறினார்.

**ரஷ்யாவுக்கு இஸ்ரேல் வேண்டுகோள்**

மார்னிங் டாஜஸ்தான் டெலிகிராம் சேனலைப் பயன்படுத்தி, யுக்ரேனில் இருந்து துரோகிகளால் இந்த கலவரம் தூண்டப்பட்டது என டாஜஸ்தான் ஆளுநர் செர்ஜி மெலிகோவ் குற்றம்சாட்டினார்.

இதனை மறுத்த மார்னிங் டாஜஸ்தான் குழு, தங்கள் சேனலுக்கும் பொனோமெரெவ் அல்லது யுக்ரேனுடன் எவ்வித தொடர்பும் இல்லை என தெரிவித்தது.

யூதர்கள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு எதிராக தூண்டப்படும் வன்முறைகளுக்கு எதிராக ரஷ்யா தீர்க்கமாக செயல்பட வேண்டும். யூதர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என இந்த சம்பவம் தொடர்பாக இஸ்ரேல் கூறியது.

ரஷ்யாவில் விமான நிலையத்தில் நடந்த தாக்குதலை யுக்ரேன் அதிபர் ஜெலின்ஸ்கி கண்டித்தார்.

**புடின் குற்றச்சாட்டு - அமெரிக்கா மறுப்பு**

இந்த நிலையில், ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலுக்கு மத்தியில் பேசிய ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின், ரஷ்யாவில் ஒருசிலர் குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். மகாச்காலாவில் நிகழ்ந்த சம்பவம் சமூக ஊடகங்களின் வாயிலாக தூண்டப்பட்டிருக்கிறது. யுக்ரேன் மட்டுமின்றி மேற்குலக ஏஜெண்டுகள் பங்கு இதில் இருக்கிறது. கொடிய குழப்பத்தை யார் ஏற்படுத்துகிறார்கள் இதில் இருந்து யார் ஆதாயம் அடைகிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும் என விளாதிமிர் புடின் கூறினார்.

ரஷ்யாவின் குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளித்த அமெரிக்க பாதுகாப்பு கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி, உங்கள் நாட்டில் தவறு நடந்தால், அதற்கு இன்னொருவர் மீது பழிசுமத்துவதா என்றார். இந்த சம்பவத்திற்கும் மேற்குலக நாடுகளுக்கும் சம்மந்தம் இல்லை. இது முற்றிலும் வெறுப்பு, மத வெறி தொடர்புடையது என ஜான் கிர்பி பேசினார்.

# ஆயுத நிறுவனங்களின் இலாபங்களுக்காக மக்கள் அழிவா?

## ஹமாஸ்-இஸ்ரேல் போரினால் லாபம் யாருக்கு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கடுமையாக தரைவழியாக தாக்குதல் தொடுத்துள்ள நிலையில், தற்போது வரை இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை 10,000க்கும் மேலாக நெருங்கியுள்ளது. இவ்வளவு ஆபத்தை ஏற்பத்தும் போரினால் யாருக்கு லாபம்? யார் பயனடைகிறார்கள்? எனும் கேள்வி சாதாரண மக்கள் மனதில் எழுந்திரும்.




### ஆயுத வர்த்தகத்தில் அமெரிக்கா:

சர்வதேச ஆயுத விற்பனையில் அமெரிக்கா தொடர்ந்து முன்னிலை வகித்து வருவதாக ஆராய்ச்சி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் சீனா தனது ஆயுத விற்பனையை கடந்த காலத்தைக் காட்டிலும் அதிகரித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போதய ஆயுத வர்த்தகத்தில் அமெரிக்க நிறுவனங்களின் பங்கு 54 சதவீதமாகும். சீனா 13 சதவீத பங்களிப்புடன் இரண்டாமிடத்தில் உள்ளது. இங்கிலாந்து 7.1 சதவீதத்துடன் மூன்றாமிடத்திலும், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் முறையே 4-வது மற்றும் 5-ம் இடத்திலும் உள்ளன. சீன நிறுவனங்களின் ஒட்டுமொத்த வர்த்தக அளவு 6,680 கோடி டாலராகும்.

ஆயுத வர்த்தகத்தில் ஏற்பட்ட உயிர் சேதங்கள் பொருட் சேதங்களுக்குப் பின்னரும், தற்பொழுது அதிகளவில் பாவிக்கப்படும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்தும் வகையில் எந்தவொரு பரந்த, பொது நோக்குடன் சர்வதேச சட்டமும் உருவாக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இதே வேளை உலகலாவிய ரீதியில் ஆயுதங்கள் ஒரு முக்கிய பாதுகாப்பு பங்காக இருப்பதைக் காண்பதுடன் அதிகளவிலான கொலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் ஒரு சமூகமாக சமூகத்தில் திகழ்கின்றது.

### போரின் அழிவுகள்:

போர்களுக்கு அடிப்படை என்பது ஆயுதங்கள்தான். இந்த ஆயுதங்களை எல்லோராலும் உற்பத்தி செய்துவிட முடியாது. சில குறிப்பிட்ட நிறுவனங்கள்தான் இதை உருவாக்க முடியும். அப்படியான நிறுவனங்கள்தான் லாக்ஹீட் மார்ட்டின், நார்த்ராப் க்ரம்மன். இவை இரண்டும் அமெரிக்காவை சேர்ந்த ஆயுத உற்பத்தி நிறுவனங்களாகும்.

ஹமாஸ்-இஸ்ரேல் மோதல் தொடங்கியதிலிருந்து இந்த இரண்டு நிறுவனங்களின் பங்குசந்தை வர்த்தகமும் உயர்ந்து சென்று கொண்டிருக்கிறது.

லாக்ஹீட் மார்ட்டின் பங்கு விலை கிட்டத்தட்ட 9 சதவிகிதமும், நார்த்ராப் க்ரம்மன் பங்குகள் சுமார் 12 சதவிகிதமும் அதிகரித்துள்ளன.

உள்நாட்டு பாதுகாப்பு (ஹோம்லேண்ட் செக்யூரிட்டி நியூஸ் வயரின் ) அறிக்கையின்படி, கடந்த 2009ம் ஆண்டு முதல், சுமார் 169 நாடுகளுக்கு 444 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான அளவில் ஆயுத விற்பனையை அமெரிக்கா செய்திருப்பது அம்பலமாகியுள்ளது.

இதில் லாக்ஹீட் மார்ட்டின் மட்டும் 100 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான சந்தை மூலதனத்தை கொண்டிருக்கிறது.

இந்நிறுவனம் ஆயுதங்களை தவிர கு-35 போர் விமானங்கள், சிகோர்ஸ்கி மற்றும் பிளாக் ஹாக் ஹெலிகாப்டர்களையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. எல்லா போர்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

### கொடிகட்டி பறக்கும் ஆயுத உற்பத்தி:

தற்போது நார்த்ரோப் க்ரம்மன் 70 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான மூலதனத்தை கொண்டிருக்கிறது. தற்போதைக்கு ஆயுத உற்பத்தி சந்தையில் இந்த இரண்டு நிறுவனங்கள்தான் கொடிகட்டி பறக்கின்றன. தாய்வான் உள்ளிட்ட உலகின் பல்வேறு இடங்களுக்கு இந்த ஆயுதங்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

இன்றைய நிலையில் ஆயுத விற்பனையும் இப்படியே போய்க்கொண்டிருந்தால் ஒரு கட்டத்தில் காலநிலை மாற்றம் உச்சமடைந்தது போல பூமியின் தென் துருவத்தில் உள்ள பனி வேகமாக அழிந்துவிடும்.

எனவே ஆயுத விற்பனை நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் வலியுறுத்தியுள்ளனர். உலகின் மொத்த ஆயுத விற்பனையில் வல்லரசு நாடான அமெரிக்க நிறுவனங்களின் பங்கு மட்டும் 51 வீதமாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### பாலஸ்தீனத்தை யூதர் ஆக்கிரமிப்பு:

ஜெர்மனிய நாஷி தாக்குதலிலிருந்து தப்பி வந்த யூதர்களுக்கு, பாலஸ்தீனர்கள் அடைக்கலம் கொடுத்தனர். ஆனால் அதன் பின்னர் ஐநா சபை 1947ம் ஆண்டு பாலஸ்தீனத்திலிருந்து பாதிக்கும் அதிகமான பகுதியை பிரித்து கொடுத்து இஸ்ரேலை உருவாக்க முடிவெடுத்தது.



கடந்த 75 ஆண்டுகளில் காசா, வெஸ்ட் பேங்க் போன்ற சில இடங்களை தவிர மொத்த பாலஸ்தீனத்தையும் யூதர்கள் ஆக்கிரமித்து இஸ்ரேல் எனும் நாட்டை உருவாக்கிக்கொண்டனர். ஆனால் இதற்கு பாலஸ்தீன மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பாதிப்படைந்த பாலஸ்தீனர்கள் தற்போதுவரை இஸ்ரேலுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றனர்.

பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தும் ஹமாஸ் அமைப்பு நடத்திய சமீபத்திய தாக்குதலையடுத்து, இஸ்ரேலும் பதில் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த தாக்குதலில் இரு தரப்பிலும் சுமார் 10000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

**ஹமாஸ்-இஸ்ரேல் மோதல் தொடங்கியதிலிருந்து இரண்டு ஆயுத நிறுவனங்களின் பங்குசந்தை வர்த்தகமும் அதீதமாக உயர்ந்து சென்று கொண்டிருக்கிறது. லாக்ஹீட் மார்ட்டின் பங்கு விலை கிட்டத்தட்ட 9 சதவிகிதமும், நார்த்ராப் க்ரம்மன் பங்குகள் சுமார் 12 சதவிகிதமும் அதிகரித்துள்ளன.**

காசா பகுதிக்கு குடிநீர், மின்சாரம் மற்றும் எரிபொருளை வழங்கும் இணைப்பை இஸ்ரேல் துண்டித்திருக்கிறது.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கூட மருத்துவமனைக்கு கொண்டு செல்ல காசாவில் உள்ள ஆம்புலன்ஸ்களில் எரிபொருள் இல்லை. ஏற்கெனவே நடந்துக்கொண்டிருக்கும், ரஷ்யா-உக்ரைன் போர், அதனைத்தொடர்ந்து தற்போது தொடங்கியுள்ள ஹமாஸ்-இஸ்ரேல் மோதல் ஆகியவை உலக நாடுகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

### உலகின் பாரிய ஆயுத வியாபாரி அமெரிக்கா:

உலகின் மிகப்பெரிய ஆயுத வியாபாரியாக அமெரிக்கா உள்ளது. ஆயுதங்களை வாங்குவதில் 2-வது இடத்தில் இந்தியா.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் 2020இல் வெளியிட்ட புள்ளி விவரத்தில், உலகளவில் நடைபெற்றுவரும் ஆயுத விற்பனை குறித்தான




தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளது.

ஸ்டாக்ஹோம் நிறுவனப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் 25 ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் மட்டும் 2018-ம் ஆண்டைக் காட்டிலும் 8.5 வீதம் அதாவது சுமார் 361 பில்லியன் டாலர் விற்பனையை அதிகரித்திருப்பதாக தெரியவந்துள்ளது. இது ஐ.நா மன்றம் அமைதிக்கான நடவடிக்கைகளுக்கு ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகையை விட 50 மடங்கு அதிகமாகும்.

2019-ம் ஆண்டிற்கான புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ள ஸ்டாக்ஹோம் ஆராய்ச்சி நிறுவனத்தின் கணக்குப்படி, அதிகரித்துவரும் சர்வதேச ஆயுத விற்பனையில் முதல் 25 இடங்களுக்குள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 12 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. முதல் 25 இடங்களுள் பட்டியலிடப்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் மட்டும் சுமார் 60வீதம் அளவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதில் அமெரிக்கவைச் சேர்ந்த 12 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக முதல் 5 இடத்தை பிடித்துள்ள அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களான லாக்ஹீட் மார்ட்டின், போயிங், நார்த்ரோப் க்ரம்மன், ரேதியோன் மற்றும் ஜெனரல் டைனமிக்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஆக்கிரமித்து சுமார் 166 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அமெரிக்காவிற்குப் பிறகு, ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 6 நிறுவனங்கள் தங்கள் பங்கிற்கு 18 வீதம் ஆயுதங்களை விற்பனை செய்துள்ளனர். ஏர்பஸ் மற்றும் தலேஸ் ஆகிய முக்கிய ஐரோப்பிய நிறுவனங்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் டசால்ட் ஏவியேசன் நிறுவனமானது, ரஃபேல் போர் விமான ஏற்றுமதியால் 38-வது இடத்திலிருந்து 17-வது இடத்திற்கு உயர்ந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த பட்டியலில் ரஷ்யாவைச் சேர்ந்த 2 ஆயுத நிறுவனங்கள் 3.9% பங்குகளுடன் இடம்பெற்றுள்ளன.



### சீனா ஆயுத நிறுவனங்கள்:

பட்டியலிடப்பட்டுள்ள சீனாவை சேர்ந்த ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் 15.7 வீதம் ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கிறது. இதில் சீனா அரசுக்கு சொந்தமான ஏ.வி.ஐ.சி, சி.இ.டி.சி மற்றும் நோரின்கோ ஆகிய ஆயுத நிறுவனங்கள் முறையே ஆறு, எட்டு மற்றும் ஒன்பதாம் இடங்களை பிடித்துள்ளன.

ஆனால் அமெரிக்கா பல ஆண்டுகளாக ஆயுத சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வரும் சூழலில், தற்போது சீனாவைச் சேர்ந்த நிறுவனங்களின் விற்பனை கிட்டத்தட்ட 5 வீதம் அதிகரித்துள்ளதாக 'ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின்' ஆயுத மற்றும் இராணுவ செலவினங்களை ஆராயும் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

(16ம் பக்கம் பார்க்க )

# ஆயுத நிறுவனங்களின் இலாபங்களுக்காக...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

**ஐக்கிய அரபு எமிரேட்ஸ் :**

ஆச்சரியம் தரும் விதமாக முதன்முறையாக மத்திய கிழக்கு நாட்டின் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்) ஆயுத உற்பத்தி நிறுவனமான எட்ஜ் (நுனுபுநு) முதல் 25 இடங்களில் சர்வதேச ஆயுத விற்பனைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் ஈட்டும் நாடுகள் படிப்படியாக ஆயுத வர்த்தகத்தில் நுழையத் தொடங்கி இருப்பதாகவும், மேலும் பாதுகாப்பு காரணங்களுக்காக செலவிடப்படும் தொகை பல நாடுகளில் அதிகரித்து வரும் சூழல் கவலை அளிக்கக்கூடியதாக இருப்பதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.)

சர்வதேச ஆயுத விற்பனையில் ஈடுபடும் பெரும்பாலான நிறுவனங்கள் மேற்குலகைச் சார்ந்தவையாக இருந்தாலும், இந்நிறுவனங்கள் சவூதி அரேபியா, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் தங்களுக்கான துணை நிறுவனங்களை அமைத்து ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு வருவது அதிகரித்து வருவதாக புள்ளிவிவரம் காட்டுகின்றது.

பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா மற்றும் சீனா நாடுகளை முடக்கி அவற்றின் உலகளாவிய சந்தையை கட்டுப்படுத்துவதன் காரணமாக, அமெரிக்க நிறுவனங்களுக்கு குறிப்பாக தெற்கு பகுதிகளில் இருக்கும் நாடுகளில் அதிகரித்து வரும் ஆயுத தேவைக்கு போட்டியில்லா சந்தையை வழங்க முடிவதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் சீமோன் வெஸ்மேன் தெரிவித்தார்.

**இந்திய  ஆயுத நிறுவனங்கள்:**

ஆயுதங்களை விற்பனை செய்வதில் முன்னிலை வகிக்கும் 100 நிறுவனங்கள் பட்டியலில் ஏச்ஏஎல் உட்பட 3 இந்திய நிறு வனங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இந்தியாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (எச்ஏஎல்), இந்திய ஆர்டினன்ஸ் ஆலைகள் (ஐஓஎப்), பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (பிஇஎல்) ஆகிய 3 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. 2019-ம் ஆண்டிலும் இந்த 3 நிறுவனங்களும் பட்டியலில் இடம் பெற்றிருந்தன.

இப் பட்டியலில் எச்ஏஎல் நிறுவனம் 42-வது இடத்தில் உள்ளது. இந்நிறுவனம் 297 கோடி டாலருக்கு ஆயுதங்களை சப்ளை செய்துள்ளது. இது 2019-ம் ஆண்டைவிட 1.5 சதவீதம் அதிகமாகும். இந்திய ஆர்டினன்ஸ் தொழிற்சாலை 60-வது இடத்தில் உள்ளது. இந்நிறுவனம் 190 கோடி டாலருக்குஆயுதங்கள் சப்ளை செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.2 வீதம் அதிகமாகும். பிஇஎல் 66-வது இடத்தில் உள்ளது. இது 163 கோடி டாலர் அளவுக்கு சப்ளை செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 4 வீதம் அதிகம்.

ஆயுத உற்பத்தி நாடுகளில் மிகக் குறைந்த அளவில் ஏற்றுமதிசெய்யும் 11 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அமெரிக்காவைச் சேர்ந்த 41 நிறுவனங்கள் இடம்பெற்று மிக அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டநாடுகள் வரிசையில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது.இவற்றின் மொத்த வர்த்தகம் 28,500 கோடி டாலராகும். முந்தைய ஆண்டை விட 1.9 சதவீதம் அதிகமாகும்.

**ஆயுதங்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு:**

ஓர் நாட்டின் மக்களை பாதுகாப்பதும், ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றை கட்டுப்படுத்துதல், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மதித்தல் போன்றவற்றிற்கு உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு அரசாங்கமும் ஆயுதங்களை கட்டுப்படுத்தும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உலகிலுள்ள வல்லரசு நாடுகள் பல, ஆயுத வர்த்தக நாடுகளாக காணப்படுகின்றன. ஆதலால் இவர்களுக்கே உலகெங்கும் பரவிக்கிடக்கும் இச்சந்தையை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அதிகமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவில் நிரந்தர அங்கத்துவம் பெற்றுள்ள ஐந்து நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா இணைந்து உலகில் ஏற்றுமதி செய்யப்படும் 88 சதவீதம் பொதுவான பாவனையிலுள்ள ஆயுதங்கள் காரணமாக உள்ளன. இவ்வாறான ஆயுதங்களே அடிக்கடி நிலவும் கொடிய மனித உரிமை மீறல்களுக்கும் காரணமாகவுள்ளது.

ஆயுத கட்டுப்பாட்டுச் சவாலை கூடிய விரைவில் எதிர்கொள்வது எல்லா அரசாங்கங்களினதும் முக்கியமான கடமையாகும். அரசாங்கங்களின் ஒத்துழைப்பு ஆயுதங்களின் பரவலையும், உற்பத்தியை கட்டுப்படுத்த உதவ வேண்டும். குறைந்த பட்சம் மேற்குறிப்பிட்ட ஐந்து வல்லரசு நாடுகளும் மனித உரிமைகளுக்கெதிராக அல்லது மனிதாபிமான ஓர் சட்டதிட்டங்களுக்கெதிராக பயன்படுத்த முனையும் பிரதேசங்களும் ஆயுத விற்பனையை தடை செய்வதில் பங்கு கொள்ள வேண்டியது அவசியம்.

ஆயுதங்கள் வறுமைக்கும் துன்பத்திற்கும் நேரடியாக வழி வகுக்கின்றன. நாள்தோறும் ஆயுத வன்முறைகளால் பல லட்சக்கணக்கான ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் அச்சத்திலும் கலக்கத்திலும் வாழ்கின்றனர். இதனால் ஒவ்வொரு நிமிடமும் ஓர் உயிர் பழியாகின்றது.

கட்டுப்பாடன்றி அதிகரித்து வரும் ஆயுதங்கள் தவறான பாவனைக்காக அரசாங்கப் படைதயினரிதனாலும், ஆயுதக் குழுக்களினாலும் உபயோகத் திற்குள்ளாகின்றது. இதனால் பெருமளவிலான உயிரிழப்பு, வருமானம் இழப்பு, வறுமையில் இருந்து மீளும் வாய்ப்புகள் குறைதல் போன்றவற்றிற்கு ஊக்கத் தொகை வருடத்திற்கு, சராசரியாக 22 மில்லியன் அமெரிக்க டாலர்களை வியாபார நடவடிக்கைகளுக்காக ஆபிரிக்க, ஆசிய, மத்திய மற்றும் ஆயுத தென் அமெரிக்க பிராந்தியங்களில் விரயமாக்கப்படுகிறது.

போரால் சிதைந்த மேற்குறிப்பிட்ட பிராந்தியங்களில் உள்ள நாடுகளில் அபிவிருத்திகளான இலக்குகளான கல்வி, மற்றும் வறுமை ஒழிப்பு, மற்றும் தாய்மார் மற்று சிசு மரண வீதத்தை குறைக்க வழிவகை செய்ய வேண்டும்.

நாள்தோறும் ஆயுத பாவனையினால் மனித உரிமைகளுக்கு எதிராக ஏற்படும் வன்முறைகள் மற்றும் போர், வறுமை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகில் கட்டுப்பாடற்ற நிலையில் ஆயுதங்கள் பரவலாக அதிகரித்து வரும் சட்டவிரோத ஆயுதங்களின் பாவனை பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

